[illegible]

O-, 11MKC6 V
N30
176338

169

உ

குமரன்றுணை.

# வள்ளிச் சரித்திரச் சந்தச் சிந்து.



மதுரை

விவேகானந்தா பிரசில்

பதிப்பிக்கப்பெற்றது.

O-, 11MKE6, V
N30
176338

உ

குருபரன் றுணை.

S. காரைக்குடி கோ. சி. ஆறுமுகம்பிள்ளையவர்கள் குமாரரும்
ஷெடியார் ஸ்ரேஸ்டதமையனார் சி. முத்திருளப்பபிள்ளையவர்கள்
ஸ்விகாரபுத்திரர் மதுரகவி சேதுமாதவம் பிள்ளையவர்கள்
மாணாக்கர்களிலொருவரும் புலவனேந்தலில் வசிக்கும்
ஷெ குருப்கர்ணம் ஹெட்மானுமான
அஷ்டாவதானம்

**S. A.**

சி. ஆ.

**கனகசபாபதி பிள்ளையவர்கள்**

இயற்றிய

# வள்ளிச் சரித்திரச் சந்தச் சிந்து.

இஃதை
தேவகோட்டை
அ ண . ரா ம.
**இராமசாமி செட்டியாரவர்கள்**
பொருளுதவியால் அச்சிடப்பட்டது.

காப்பிரைட்] 1930 [விலை ரூ 1—0—0

Vivekananda Press, Madura-1930.

-600 008.
176338

## சாற்றுக் கவிகள்.

### இந்நூலாசிரியரி னாசிரியரான மதுரகவி சேதுமாதவம் பிள்ளையவர்கள் குமாரர் மு. சே. முத்துக்கருப்ப பிள்ளை அவர்களியற்றிய

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.)

சரித்திரத்தை'க்கொண்டகிரா தரினிறைவன் றவத்துதித்த தனையை வள்ளிச்
சரித்திரத்தை ச்சந்தச்சிந் தாய்ப்புலவ நகர்வதியு தாரன் மாகுஞ்
சரித்திரத்தை யருள்பெருகுங் கனகசபா பதிபுகன்ற சாரத்தாற் கே
சரித்திரத்தை யுடையவிதி நாவுரைந்து வதனம்வெளுத் தாள்பா மாதே

### மேற்கண்ட கருமலைபுதுப்பட்டி ஆ. று. சோம. சோமசுந்தரஞ் செட்டியாரவர்களியற்றியது.

அறுசீர்க்கழி னெடிலடியாசிரிய விருத்தம்.

மலைமகவி யகமனைய மழைதிகழ்கா ப்புலவநகர் வாழும் பூமன்
கலைமனதிற் கொண்டிலகுங் கனகசபா பதிக்கவிஞன் கழரு கின்ற
சிலைமழுக்கொள் வேடர்பெற்ற வள்ளி சரித்திரச் சந்தச்சிந்தைக் கேட்டு
தலைமருவ மண்சுமந்த னந்தனும்பா தலமதனிற் சார்ந்தான் மன்னே

### இந்நூலாசிரியன் சிரேஷ்ட குமாரர் சி. ஆ. க. நடராஜபிள்ளையவர்களியற்றிய

எண்சீர்க்கழி னெடிலடி யாசிரிய விருத்தம்.

பூமகளும் பாமகளுங் கனிந்துமல்கும் புலவநக ரத்துறை யெட் மானென்றந்தை
காமகவான் மருகனிணை யடியைப் போற்றுங்கனகசபா பதிக்கவிஞன் கற்கிராதர்
கோமகவி வள்ளி சரித்திரத்தைத் தேசு கொண்ட சந்தச்சிந்தாகக் கூறக்கேட்டு
வாமகவிப் பொருளரன்பாற் றோர்ந்தகும்பன் மனங்குறுகியேமலைவாய் வதிந்திட்
[டானே

### சிவகெங்கைஜமீன் இராஜா ஹைஸ்கூல் தமிட்பண்டிட் எம். பி. கணபதியா பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழி னெடிலடி யாசிரிய விருத்தம்.

சந்தனத்தையணி வள்ளிச் சரித்திரச்சந் தச்சிந்தைத் தாமங் கெ
கந்தனத்தை யருள்பெருகுங் கனகசபா பதிக்க[illegible]ஞன் கழறக்கே
முந்தனத்தை யடைந்தவன் சேய்முள்ளி[illegible]ல ரினி[illegible]றைந்தோன் [illegible]வாணி
வந்தனத்தை யணிந்திலகு வாக்காளை [illegible]வள்ளை யென வழுத்து வா[illegible].

சாற்றுக் கவி.

வானரவீர மதுரை வித்வான்

மு. மஸ்தான்கனி அம்பலகாரரவர்களியற்றிய

வெண்பா.

தாரணியில் வள்ளி ச்சரித்திரச் சந்தச்சிந்தென்
றேர்மிகும் ப்ரபந்த மியற்றினன் — சீர்பெருகுஞ்
தாரார்கனக சபாபதி வேணற்புலவர்
தேரும்படிக்கே தெளிந்து.

## இந் நூலச்சியற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட கனவான்களின் விலாசம்.

மருங்காபுரி ஜமீன் தேவஸ்தானம் புதுப்பட்டி
ஆறு. சோம. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள்
செ. க. ஆ. மாணிக்கஞ் செட்டியாரவர்கள்
மணியங்குரிச்சி துரைச்சாமி பிள்ளையவர்கள்
மங்கலாம்பட்டி முருகப்ப செட்டியாரவர்கள்
சிங்கம்புணரிச் சேயர்மேன் பொ. சேவகப்பெருமாள் பிள்ளைபவீர்கள்
தேவகோட்டை அண. இராமசாமி செட்டியாரவர்கள்
ஆறுவயல் அம்பலம் பெரியசாமி பிள்ளையவர்கள்
கட்டுகுடிப்பட்டி தாண்டவம் பிள்ளையவர்கள்
சிவகெங்கை இராஜா ஹைஸ்கூல் தமிழ்பண்டிட்
கணபதியாபிள்ளை யவர்கள் சகோதரர் முத்துக்கருப்ப பிள்ளையவர்கள்
வானர வீர மதுரைஅப்துல்கரீம் சாஹிப்
ஷை இராஜபார்ட் மதுரை வீரணச்சாரி
ஷை தமிட்ப்ரசங்கம் சப்பாணி மணியகாரர்
வடக்குச் சந்தனூர் கா. வேலுசேர்வை
ஷை கா. முத்து சேர்வை
S. காரைக்குடி கர்ணம் மு. வெள்ளைத்தம்பியா பிள்ளையவர்கள்
ஷை மு. கு. முத்துராமலிங்கம் பிள்ளை
தெ. புது[illegible]ட்டை இ. ரா[illegible]ாயணசாமித் தேவரவர்கள்
கொடு[illegible] வ. குமாருச[illegible]மி பிள்[illegible]ளயவர்கள்
அபிராமம் மு. செல்லம்பிள்ளையவர்[illegible]

## ரிஜிஸ்ட்டர் அறிவிப்பு

# பிரசித்த விளம்பரம்.

6 JAN 1931

வள்ளிச் சரித்திரச் சந்தச் சிந்து
சுப்பிரமண்யர் சுவாமி பேரில் பக்திரசக் கீர்த்தனைகள்
கோமேளூர் குமரக்கடவுள் திருப்புகள்
S. காரைக்குடி சித்திவிநாயகர் பதிகம் பஞ்சவர்ணத்திருப்புகள்

முதலான பக்தி விஷயமான பாடல்கள் இப்புத்தகத்தில்ச் சேர்த்து ஒரே புத்தகமாக அச்சிட்டு காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்திருப்பதால் அச்சுக்கூட தலைவர்கட்கும் மற்றும் யாவருக்கும் தெரிவிப்பது யாதெனில்,

நம்முடையவும் நமது வாரீசுகளுடையவும் அனுமதியன்றி மேற்கண்டபுத்தகத்தையாவது அதிலடங்கிய எந்த பாகத்தையாவது தமிழிலாவது வேறு பாஷைகளில் மொழிபெயர்த்தாவது அச்சிட்டாலும் பிரித்து வெளிப்படுத்தினாலும் 1867-ஆண்டு 25-வது ஆக்டின் 20-வது பிரிவிலுள்ள 6-வது விதியில் சொல்லியிருக்கிற பிரகாரம், இவ்விளம்பரத்தை மீறி நடந்தவர்களிடம்,

நமக்கு ஏற்பட்ட சகல நஷ்டத்திற்கும் கோர்ட்டின் மூலமாய் வியாஜ்ஜித்து வசூல் செய்யலாகுமென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளக் கோருகின்றோம்.

சி. ஆ. கனகசபாபதி பிள்ளை
ஹெட்மன்
புலவனேந்தல்
மானாமதுரை போஸ்டு.

உ

# தெய்வ வணக்கம்

## வெண்பாக்கள்

### விநாயகர்

பார்படைத்த வேதியனும் பண்ணவரும் போற்றிசெயப்
பேர்படைத்த முன்னோன் பிரதாபச்—சீர்படைத்தோன்
காமன் கனிபொருந்துங் கந்தனுக்கு முன்னுதித்த
தூமகேதின் றுடுணை.

### சுப்பிரமணியர்

குடமுனிவந்தாரணத்தைக் கூறெனவே லுங்குக்
குடமுனி வந்தார வுரைகூறும் திடமுடைய
கந்தா குகா கடம்பா கார்த்திகேயா முருகா
வந்தாதரி ஜெகதேவா.

### சோமசுந்தரேஸ்பரர்

அத்தியுரி போர்த்த சிவானந்தா துவாதசாந்
தத்தின் வடிவே சதுர்வேதா சித்தா
வரஹர சம்போ சோதி யாதியேயுன்றன்
திருவருடந் தாதரவு செய்.

### மீனாட்சியம்மன்

சச்சிதானந்தி. சிவசாம்பவி. சைவாகமத்தி.
பச்சைவடிவாளே. பராசத்தி. அச்சுதன்ச
கோதரி. மீனம்பிகையே. கூடற் கரசி. யென்னை
யாதரித்து. க்காப்பாற்றுவாய்.

} இஃது வசனப் பாவுமாம்.

### திருமால்

உம்பாக்கறிய வமுதூட்டி யுவரிதருஞ்
செம்பதுமமாதைத் திருவதுவை—யம்புவியோர்
கொண்டாடச் சூட்டிக் கொடியவரக்கர்களைக்
கண்டித்த ராமா நீ கா.

### சாஸ்வதி

முத்தாபரணி வெள்ளை முண்டகச்சி மாதனத்தி
முத்தாபரம் புரக்கு மூதறிவா—ருத்தமியைக்
கம்பன் றொழப்புதுமை [illegible]ணித்த வாக்காளை
நம்[illegible] தமிழ்புகல்வே [illegible]ன்.

## 1. வில்லாயுதர்

கல்லா யுத மாய் க்கையிலெடுத்த சோதிதந்த
வில்லா யுத மூர்த்தி விண்ணவனை யெல்லாரும்
பூவிற் புகழ்மிகுந்த புத்தநக ரத்தானைத்
சேவிக்கச் சேருந் திரு.

## 2. உயயவந்தம்மன்

துய்யவந்தா ளன்மாமி சோதிவடிவு பொருந்
துய்யவந்தா ளன்பரகத் தோங்குசத்தி யையனுட
னம்பலத்தி லாடுமக மாயிகிருபையுண்டாஞ்
செம்பதும த்தாடுதிநெ ஞ்சே.

## 3. இருளப்ப சுவாமி

மன்னிருளை நீக்குமொளி வாள்போல் வினையகற்றும்
பொன்னிருளன் பாதமலர் போற்றினு ளென்னுளு
மாசகற்றி யூழின்வலிகளைந்து வாழ்வுடனே
தேசடைவ தேநிச் செயம்.

## 4 இருளாயி அம்மன்

ஆதியாய் நின்றபர னன்பையடைந்து ஜெக
சோதியாய் நிஷ்க்களசொரூபமாய் வேதப்
பொருளா யிணைபுகலாப் புத்தநக ரார்பொன்
னிருளாயி யேதுணையாமே.

## 5. கறுப்பண சுவாமி

பூசுரரும் வேதப் புனிதருங்கொ ண்டாடுகின்ற
தேசுபெரும் புத்தநகர்த் தேவனும் வாசிக்
கறுப்பணசுவாமியைச்செங் கைகூப்பிப்போற்றச்
சிறப்படையச் செய்யுமகிழ்ந்தே.

## 6. சோணைக்கறுப்பண சுவாமி

சங்கமலி புத்தநகர் சார்ந்தடியா ரைக்காத்துப்
பங்கமுள துஷ்டரைப்[illegible]பற்றியே சங்கா[illegible]க்குந்
தாணைக் கருதுகின்றச[illegible]ட்சா[illegible] வானவெங்கள்
சோணைக் கறுப்பன்[illegible]ணை.

## வேலோனே என்ற மெட்டு.

பல்லவி.

மீனாட்சி.

விக சித வருள் புரி மீனாட்சி
வித ரண மா கத மீனாட்சி
விரை செறி கிற குழன் மீனாட்சி
வெகு விம ரிசை யுள மீனாட்சி

அநுபல்லவி.

மேனாளடை சம்பந்தனே ஞானாமு தந்தந்து கோண் மீனாட்சி
மிகுசம்ப்ரம முடனுன்கர்பை தரு சந்த்ரவ தனலங்கர்த மீனாட்சி
விதுவைத்தொடு மதிலேக்கொளு மதுரைக்கதி பதியுத்தமி மீனாட்சி
விந்ததங் கின்பங்கொண் டுந்துஞ்சம் பிள்பங்கின் மீனாட்சி

சரணங்கள்.

தேனார் மொழி புக லலே விழி யயிலே
செறியடி யவர் மனத் தருவடை குயிலே
வானார் முகி லுற நட மிடு மயிலே
மக்கட்பகு திக்குச் சுக மெய் க்கத்தரு முக்கட் க்கனி மீனாட்சி

அன வர தமு மருண் மழை பொழி னங்காய்
அசு ரரி னூயி ரற வட ரரி தங்காய்
ஜன கரு ரக ரிஷி துதி யான் பங்காய்
தழை தாமரை மலர் போலுள கழல்தாவனு தினமே யுமை மீனாட்சி

கனி மிகு புல வன கா மகி பதியே
கனக சபாபதி தமிட் கதி பதியே
மினே யண வுட லமி லகு பக வதியே
வேதாகம மாதாவுன தாதாரம தேதாபர மீனாட்சி

---

## மேற்கண்ட அண. ராம. இராமசாமி செட்டியாரவர்கள் இந்நூலச்சியற்றியதின் பிரையோசனம்

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பாவலவ ன்கனகசபா பதியால்வள்ளிப் பாவையினற்சரிதமதை பண்ணிற் பாடும்
நாவலவ ருக்கியைந்த சந்தச்சிந்தாய் நவின்றவிதைப்பொன் பரவு தேவகோட்
[டைக்
காவலவ ன்மதிவலனி ராமசாமிக் கன்பனெழு நூறுபொன்னீய்ந் தச்சியற்று
மேவலவ் னற்புரிந்த தாலக்கீர்த்தி யெஞ்ஞான்று ங்குகனருளா லிலங்குமாதோ.

# இந்நூலியற்றிய வரலாறு

## பதினறடியாசிரிய விருத்தம்.

திருவளர்ம ருங்கையைச் சேர்ந்தொனிரு கரிகிரிச்
சீதாத் தேவதானம்
செந்நெலுயர் புதுவைநக ரரியூர் வகுப்பினிற்
றிகழ் வணிக்குலதிலகனும்
சீர் கொளா றுமுகவேள் செய்தவப்பயனை
சேய் தந்தை பெயரின் முன்னஞ்
செறியுமுப வக்கரவி லாசனு திக்கடிமை
செய் சோமசுந்தர நலோன்
மரு மருவு காரையம்பதி குலவு காராளன்
வடிதமிட் புகலுவலவன்
வாழ்வு தரு மேழிக் கொடிக்கதிப னுறுமுக
மகிப னுற்றி யவறத்தால்
வந்திலங்கிய புலவநக குறைந்ததனி லெட்
மான் வேலை பெற்றகவிஞன்
மதி கொள் கனகசபா பதியூகி யிடம் வள்ளி
வாழ் வுற்ற காதை யியல்பை
தருமமூல வுலகிற்பல் சந்தமாய்ப் புகல்ச்
சதாவு முயர்ச்சித்ததால்
சந்தமை யைந்தினிற் சாற்றி யதை யழகை யெழில்
சார்தேவகோட்டைவாசன்
சரியை மதியான் றனைச் சாராரைமதியானு
தாரன் செவ்வஞ்சு மதியான்
சத்யவசனத்தானு தவுபரிசனத்தானி
தானனன் பூசனத்தான்
உருமாரன் அகாணக ரவிலாச னதிபதியிவ்
வுகமகிழி ராமசாமி
யுத்தமன் பொருளுதவியிப் பாவை நிகளும் பிர
மோதூத சம்வத்ஸரம்
உசிதவரி யிரவி பஞ்சாங்க மன்ருலவா
யுறை விவேகானந்தா வென்
ரோங்குபிர ஸிற் பதிப்பித்தனன் முருகேச
னுரு வாழவை யருளுமாதோ.

---

உ

குருபரன் றுணை.

## சிறப்புப் பாயிரம்.

சீதப்புனன்மலி யோதை கடலுடுத்
தேதமறப் பொற் பூதாக்குயமே
னதியெனுமாரம் வதிபார் மடந்தைக்
கதிவியனுறுமா நுதலணி திலக
மெனவெடுத்தேற்றுந் தனமிகுபாண்ட்ய
னனியரசியற்றிய கனமுறை நாட்டிற்
றொன்மூதூரெனத் தோன்றடையாளம்
பன்மூதூரினும் பரவிய கூடற்
பதிக் கீழ்பாங்கின் வதியெழின் முகவைக்
கதிபதி சேது பதிதருஞ்சீலத்
துங்கமிகுஞ் சிவ கங்கைச்சமீனில்
பொங்கு மெழில்பல தங்கிளையாங்குடி
மார நாயினார் மருவிய தாலுகா
வாரும் பலநக ரதின்வளமீக்கொள்
பூம்பொழில் வாவிசூழ் தெம்படு கழனியி
லாம்பலுஞ் சாலியு மழகுறவளருங்
காரையம்பதி வாழ் காராளமகிபன்
மாரதன்சடையின் மருவுக்கங்காகுல
னாறுமுகவே ளருந்தவப் புதல்வன்
வீறுடைக்குமர வேள்பத மறவா
னருளிற் பொறையி லன்பிற் கலையார்
தெருளிற்றனக்கெதிர் செப்புவ மையிலான்
செந்தமிண் மடந்தை மைந்தனன் மதியான்
சந்திர வதனத் தார்மடலூர்மதன்
கனியுமை யடிபணி கனகசபாபதிச்
சனகன் குமரன் சரிதந்தனிலோர்
பகுதியாம் வள்ளிப் பாவையின் கதையை
விகுதி பெறவே மிளிர்சந்தச் சிந்தாய்ச்
சிந்தாமணியெனத் தேர்ந்தவருறைக்கச்
சிந்தினன் முத்தமி டேரிசைப் புலவோ
ரிறும்பூதெய்தி யேற்றவெக்காலும்
நறுந்தேன் பாகென நலன்பல தங்கி
சொற்சுவை பொருட்சுவை தோன்ற வெப்பகுதியு
நற்சுவை பெ[illegible] னாமமேதெனில்
சந்தமார் வள்ளிச் சரித்திரச் சந்தச்
சிந்தெனவுரைத்தல் சிறப்புடைத்தாமே.

———

இந்நூலாசிரியர்




சி. ஆ. கனகசபாபதி பிள்ளை அவர்கள்,

உ

குருபரன்றுணை.

# வள்ளிச்சரித்திரச் சந்தச்சிந்து.

## விநாயகர் வணக்கம்.

### காப்பு

### வெண்பா.

அரித்திரச் சந்தச்சிந்தை யாள்சுகுண வள்ளிச்
சரித்திரச் சந்தச்சிந்தை ச்சாற்றத் — தரித்தகரைக்
கந்தரத்தா னத்தானே காப்பு தவுற் றூர்பாவுங்
கந்தரத்தா னத்தானே காப்பு.

சந்தம்.

தானன தானதந்த தானன தானதந்த
தனத்தன தந்தத் தந்த தானனே தன
தனத்தன தந்தத் தந்த தானனே தன
தந்தன தந்தன தந்தன தந்தன
தந்தன தந்தன தந்தன தந்தன
தனத்தன தந்தத் தந்த தானனே தன
தனத்தன தந்தத் தந்த தானனே

சிந்து, யாவுங்குளகம்.

தாமரை யாளையன்ன பூவை கிருதவள்ளிச்
சரித்திரச் சந்தச் சிந்தைச் சாற்றவே கரி
யுரித்துடுத் தெந்தைக் கன்பிற் போற்றவே நறை
தங்குக தம்பமு றைந்துதி ருந்திய
வங்கமி லங்கிய சங்கரி தந்திடு
தடக் கஜக் கன்றைச் சிந்தைக் கேற்றவே யுரு
மிடுக்கணைச் சிந்திச் சந்தித் தாற்றவே (1)

(கண்ணிகடோறுஞ் சந்தம் வருவித்துக் கொள்க)

### ஆக்கியோன்.

காமிக வேசெறிந்த காரையி லேபொருந்திக்
    கருத்து மிகுந்திலங்குஞ் சீலனே யறு
    முகப்புனிதன் றருஞ்சு பாலனே செழுங்
கலைமகண் மாமரை மலரண சீரடி
நிலையென வேதுதி கனகசபாபதி
    கடுப்பகை யென்றும் நின்ற கோவிலே யள
    விடப்பொலி சிந்துவிண்ட பூவிலே (2)

### அவையடக்கம்.

மாமக வாதிமுன்ன மேமல ரேவிமன்ன
    மழுக்கானன்ற தங்கம் வேகவே விழித்
    தழித்தன னென்ற கந்தை யாகவே தனை
மருவவெ தாவது புரிபவர் பாலிரு
நயனமு மேவுக வெகுளுவ போலிதை
    வழுத்தினன் மிண்டாரன்பி லாற்றவே . பிழை
    யெழுத்துறி லுங்கனிந்து போற்றவே (3)

### இச்சரித்திரம் யாவும்குளகம்.

மாமலி வானகந்த மாதன மேருவண்டை
    மறைப்பிர சங்கமெங்கு மீறவே திக
    டிருப்பதி யங்குகொங்கு மேறவே கதிர்
மண்டிய தங்கலி னின்புட னெண்டிசை
கொண்டவ லங்கர்த நண்பரு மண்டரு
    மதித்தன் புறைந்தாங்கி ஞடவே நுதன்
    மதித்தெய்வ சிந்துரங்கொண் டாடவே (4)

கோதற வேகணங்கள் மீதல மேவுபெண்கள்
    குதித்தும ருங்கொருங்கி லாடவே சிலர்
    துதித்துய ரும்பதங்கள் பாடவே தினங்
குரைகட லெனவெழு சங்கப் பந்திகள்
பறைதவின் முரசொடு தம்பட் டந்தொனி

கொடுக்கவ ரந்துலங்கச் சீலமே வுகுக்
குடக்குமான் பொருந்தக் காலமே (5)

பூதல மீதுதொண்ட நாடுரை மேலமுந்திப்
புரத்தைநெ ருங்கிவிண்ணே மேவியே பல
தருக்களி லங்கமன்ற ருவியே யதி
புதுமைகண் மேவிய வள்ளித் தாபர
மருகதி தேசுய ருஞ்சிற்றாரது
புரக்கு மருங்கி லங்கு மாரனே பொருள்
பெருக்க வடைந்து மஞ்ஞை யூரனே (6)

ஆதர வாகுமென்று மாதவ மாதிகொண்டு
மடக்கமி குந்தமைந்தர் தேடியே யொரு
மடக்கொடிக் கன்றுசிந்தை வாடியே தின
மன்பர்கள் சிந்தை யுறைந்த குகன்கழ
றொண்டுபுரிந்து வருந்தரு ணம்புவி
பனைத்துமு கந்தநந்தி பாதமே சிவ
முனிக்கினி தென்றடைந்து வேதமே (7)

ஓதியவாறு வள்ளி மாமலை மீதிலிருந்
துருக்கமுடன் றவங்கள் செய்யவே மலர்
பெருத்த வனங்கடந்து பையவே திரு
வுருவங் கொடுவரு பிணையொன்றெதிருற
முனிபுங் கவனதை யடையுஞ்செயலக
முதித்தது கண்டிருந்த மால்பெண்ணே மதி
கதித்ததி னுந்தி சென்ற மேல்விண்ணே (8)

ஆசைகொண் மானிலங்குதேசொடு குனிரைந்தங்
கருப்புதை யுற்றவள்ளித் தாவிலே பெண்ணே
விருப்பொடு ழைந்துபெற்று மேவிலே யிது
வலகம தினமென வெருவிப்போயின
பினரரு மதலையு மலரிக்கூவின

மேல்முந்திப்புரம்-மேற்பாடி முந்தி-பிடம்-தலம்-ஊர்-பாடி

வகத்திருந்தங்குறுங்கு மாரனே குக.
மகத்துவமென்றுகந்தவ் வீரனே (9)

பூஜிதை யாயெடுத்து மாதிட மேகொடுக்கப்
பொருப்பினை வென்றநங்கை வாங்கியே யிரு
கரத்திடைகொண்டிறங்கித் தாங்கியே மகிழ்
பொங்கவ ணங்கொடு தங்கலில் வந்துசு
மங்கல மெங்குமு ழங்கவ றஞ்செய்து
புதைத்தபெருந்தனங்கை சேர்ந்ததே யென
மதித்துமிகுந்தவன்பு கூர்ந்ததே (10)

ஆதர வாய்வளர்ந்துஞ் சோதிப்பொன் னுனிரைத்து
மருமைப்பெண்வள்ளியென்ற நாமமே யிட்ட
பெருமைக்கியைந்திலங்கி வாமமே விய
வரிகுற வரசுகோ ளாசைய தேயென
மருமலி குழல்வளி மாமயில் வாசியை
யமைத்துவளர்த்துமங்கை யாகவே யவன்
றமர்க்குண்மிகுந்தவன்புண் டாகவே (11)
கோதற வேவிளைந்து மீதல மாவிநின்ற
கொழுத்தபுனம்புகுந்து காவென்றான் புட்க
ளழிக்குமுனின்றுநன்று போவென்றான் அதி
குணமகன்மனமகிழ் கொண்டந்தக்ஷணம்
வணமிசையுயர்தினை கண்டன்புற்றதைக்
கொழிக்கும் விலங்கினங்கள் போக்கவே வள்ளி
வழிப்பர ணங்கிருந்து காக்கவே (12)

(2வது வேறு சந்தம்)

அந்தரத் திருந்தரிய மந்திரத் துயர்ந்தமுது
வாரணந்தேர்நாரதனு மோடியே வந்து
வாரணஞ்சேர்வேள்விமலை நாடியே தேனை
யனைய நெடுவிழி வனிதை குறவளி
யினைய வனமிசை தனிமை யுடனுற

(நம்பிராஜனுக்குக் குமாரன் என்ற பெயர் ஒன்று.)
கொழித்தல்—கவர்தல்.

வந்தரமின்போலவெதிர் கண்டனன் வெகு
சிந்தைமகிழ்வாகமொழி விண்டனன் (1)

சுந்தரம டந்தையே நீ யிந்தவனம் வந்தவாறேன்
தொல்லையின்றி தந்தை தாயின் பேருமே போரை
வெல்லவல்ல வுங்கள் ஜாதிச் சீருமே பசுந்
தோகையேபுன மீதி லுற்றது
மேகமேபா னேறி நிற்பதுஞ்
சொல்லுவாய் விரைவினில்மா மங்கையே யுனக்
கல்லல்போம் படியுரைப்பே னங்கையே (2)

இந்தவகை நாரதனுஞ் சிந்தைமகிழ் வாகவுரைக்
கின்றசொல்லை வள்ளிமன தஞ்சியே கொண்டு
நின்றுமெல்ல வுள்ளமகிழ் மிஞ்சியே யமிழ்
தினைய தாய்மொழி பகரு வாளதி
வினைய மாய்விழி நிலனை யேயுற
வெனதுதந்தை நம்பிராஜா சிங்கமே யினு
மனைசிறந்த நங்கையேமா தங்கமே (3)

சந்ததமுங் காட்டிலேகி விந்தைமிகு வேட்டையாடுஞ்
சங்கைகொள் குறவக்குல மாதியே தினை
யிங்குளதிதனைக்கிளை கோதியே செலா
தந்தை யெனையிவ ணந்தி பகலும
லிந்து வருகிற ஜெந்து களைவெகு
தந்திரமாயோட்டுதலுக் கேற்கவே சொல்ல
வந்தனன்யானேற்றிதனைக் காக்கவே (4)

என்றுரைத்த மாதரசை நன்றிழைத்த நாரதனு
மிந்தவிதி வந்ததுனக் கேனம்மா நறுங்
கந்தமணி கந்தனிடத் தேசும்மா வதி
யின்பு சாலவுறைந்தி டாய்வரு
துன்பியாவு நுழைந்தி டாதுனக்
கிந்தயோக மெப்பொழுதுங் கிட்டுமோ வன்பாய்
வந்தியாலுனக்கலைது மட்டுமோ (5)

பன்மணிக ளாலிழைத்த நல்லணிக ளானிறைத்துப்
பாதசரம் தண்டைபீலி போடுவார் வெகு
காதலடைந் தண்டைகோலி நாடுவார் அவர்
பாலி லேயினி மேவுநீமதி
காலி லேறியுமீடி லாரொனிற்
பண்ணவரு மொப்பரோவென் றோதினன் இந்த
மண்ணவரிசைக்கொணுவச் சூதினன் (6)

சொன்னமொழி கேட்டுவள்ளி யுன்னியழன்மாட்டுகொள்ளிச்
சூடுதைத்ததென்னவெதிர் நோக்கியே மலே
வேடருக்குமன்னுசினந் தாக்கியே படு
துஷ்டனேயுனக் கோமருங்கிலே
மட்டிபோலறி வேயிழந்துரை
தோகையாண்முனந்தனியே மேவியே மிகு
வாகுசேர் புனந்தனிலே தாவியே (7)

சின்னவய தாகுமென்றன் முன்னமதி யாதுவந்து
சீரிலாது பேசவுன்ன லாகுமா வண்ணர்
நேரிலோ சுடாது சும்மா போகுமா மதி
தெரிய விலேதவ முனிவ னெனவற
நெறியி னெருபிழை முனிவ னினியுட
னேகுவா யுனதுபதி தேடியே மிகு
வேகமா யடவிவழி கூடியே (8)

வன்னவளே தன்னுவள்ளி யின்னவுரை சொன்னதெண்ணி
வாட்டமுடனே முனிவ னோடினன் அதி
கூட்டமுள்ள வேலனவை நாடினன் திரு
மருக னிணையடி தொழுது சிலேமன
துருக மடமயி லெழிலே முறைமுறை
வரிசையா யெடுத்துரைக்கப் பார்த்திட்டான் இரு
காமுமே செறித்த சென்னி சேர்த்திட்டான் (9)

கன்னன்மணி தன்னுமுடி சென்னிமிசை மின்னவணி
காங்கையா வுனக்கடிமை நாளுமே நெஞ்சங்
தாங்கியானுரைக்கு மொழி கேளுமே வித்த

காகிருதர்கு ழாமு லாவிய
யாக மாமலை யோர மாயொரு
கன்னிகையிருக்க வெதிர் கண்டனன் அவ
டன்னழ கிசைக்க மகிழ் கொண்டனன் (10)

காரிருள் கருஞ்சுரும்பு மாரிகொண் முகிலை வென்று
கருமணலையும்பழித்த கொண்டையே விழி
யரமயிலையும் பகைத்த கெண்டையே தினங்
கலைகளுறுபிறை நுதலமாரிறை
விலெனை வளைவுறு புருவமலிகனங்
கஞ்சனமிதழ் பவளஞ் செண்பகம் அவள்
செஞ்சொலை நிதம்பழகு மஞ்சுகம் (11)

மாரியன்றித் தீய்ந்தபயிர் தேருமென்பு மேவுமுயிர்
மாண்மரந்த ழைக்குமவள் சொல்லினல் கதிர்
நாணுமந்த முத்தனைய பல்லினல் முகம்
வானுறுஞ்சசி நாசியக்குமிழ்
வானரங்களி னுலைடத்திடு
வாரியின் முழங்குமணிச் சங்கமே களஞ்
சீரியாகம்பசுமைத் தங்கமே (12)

விண்டுசொல்ல லன்றுவள்ளைத் தண்டுசெவி யென்றுகொள்ளும்
வேயடிநிகர்த்த தோள்க ளாசமே வெகு
வாயணியவுற்றமா சிங் காரமே மார்பு
வேளைமுனியரன் வாழ்மலையயம்
மாதுதனமென வோதிலதுவொரு
வென்றியால் வளைத்திடவும் பார்த்ததே யதை
யன்றியே யரக்கனடி பேர்த்ததே (13)

முண்டகத் தரும்பெணிலோ விண்டல்த் துறுங்கதிரான்
மோதுகிரணங்கள் கண்டு விரியுமே யதின்
மீதளியினங்கள் வந்து திரியுமே வன்ன

முதிரு சூதென வேயுரைத்திடி
லதனை யேகவி டாதுவெட்டென
மொழியவிதியுண்டதுவு மன்றியே க்ஷணத்
தழியுமெழுமன்றடையும் வென்றியே (14)

பாம்பரமெனிற்சிறுவ ரம்புவியினிற்கயிறைப்
பண்புடனிறுக்கியதைக் காட்டுவார் அப்பால்
மண்படவிழுத்திவளைத் தாட்டுவார் எழிற்
பந்தையிணையெனி லிந்துநுதலியர்
சிந்தவிழுமெழும் வந்துகரமுறும்
பச்சிளநீரென்னிலதற் கில்லையே மாலை
க்கச்சணியோடுன்னுமண வில்லையே (15)

கும்பமென் நம்பவதின் வம்பொடுசு ணங்குமிலை
குஞ்சரத்தின் மத்தகமென் றோதினால் அவை
பஞ்சிசிற்கு முற்றவன்செய் வாதினால் நதி
குலவு மற்புத மெனவு ரைத்திடி
லலரி பொற்புற வணிவ தற்றன
கொவ்வையின் கனியெனச்சொன் னாற்கண்டே புட்கள்
கவ்வியின்புடன் புதுமென் மேற்கொண்டே (16)

ஆகமதிலங்குசக்ர வாமிதுவென்றுநிச்ய
மாகவுரைத்தாலதுவும் பறக்குமே யிரைக்
கேகசினைத்தாவிடமூர் துறக்குமே யெழி
லானகோங்கரும் பெனவுரைத்திடி
லீனமாங்குறும் முடிகருத்தில
வந்தமிகுமாங்கனியென் றோதலாம் அவை
நைந்தழுகுந்தூங்குமர மீதெலாம் (17)

தக்ரம்லி செப்பெனவே புகலுவதுதப்பதுவோ
தச்சனாற்கடைந்தெடுக்க லாகுமே யாரும்
பச்சமாய்த்தனங்கொடுக்கப் போகுமே மெத்தத்

அலரி-பூப்பொது

தாதிலங்கிய தேசியின்கனி
யீதுவென்றினியோதிலங்கது
தாருமே விருந்துதிரு மற்றதே சீராய்க்
கீறியே ரசம்பிளிய லுற்றதே (18)

மோதுகின்றதாளமென வோதவந்தபோதிலதின்
முகட்டினிலிலங்கு தொளை சேர்த்ததே யிந்தச்
செகத்துளரியைந்த வடங் கோர்த்ததே கயல்
மூதிரு வாரிதி குலவு பூவினி
லதனை யாதென மொழிகு வேனினி
மூதுணர்ந்தோ ரோதுவமைச் சொல்லையே நம்பி
யோதவந்தோ கோதறுத லில்லையே (19)

ஆலாலதர்க்கதனை யோதலேயடுக்குமல
ராரமும் நறுங்கலவைச் சந்தமும் அலங்
காரமுந்த ரும்புனுகின் கந்தமும் சொலற்
கறிய விகசித கனப குங்கும
முறைய வதிமண மருவ விங்கித
மாகவிறுமாந்து விம்மி யோங்கியே பணைப்
பாகிவரி சேர்ந்து நண்ணி வீங்கியே (20)

வட்டமிட் டடிபறந்து கட்டுகச் சணிசிறந்து
வாருமாலையொடு முத்தின் வேலையும் செய்த
நாகரீகமோகனப் பொன் மாலையும் இரத்ன
வரிசையுட னுயர் கனகமிசை பதி
யுரகமணிதிகழ் சரம திலகிட
வம்பையுங்கிழித் தெழுந்தி னங்கையே பிடித்
தும்பியின்காத்தை வென்ற முன்கையே (21)

கொட்டிநிலநெய்தலோடு திட்டமானபொய்கைமேவு
கோகனகமுந்தனி ச்செம் பஞ்சுமே வெகு
வாகறங்காங்களைக் கண் டஞ்சுமே தினங்

கை-ஒப்பனை. அறங்காம்-அகங்கை.

குரைகடற் கழி றெனவிரற் களை
யுரைசெயத் தகு முகிரினைக் கனி
கொதுகிளி மூக்கெனவே துதிக்கலாம் மற்றொன்
றுதடுதைத யெர்க்கனவே மதிக்கலாம் (22)

சுந்தரமிகும் வயிறு சந்ததமகிகொழுனன்
றாங்கியெழுகின்ற வாலைப் போலுமே வெள்ளத்
தொங்குசுழியுந்தி போலச் சாலுமே மன்னுந்
துரிகவுருவிலி தேரை யுபதனக்
கரிகடெளிவுட னேகை யுறவடந்
தொட்டெனவுதர மயி ரொழுங்குமே தூசு
கட்ட மின்னனையவிடை யழுங்குமே (23)

அந்தரமுறைந்தவிதி சிந்தையைமறந்துசதி
யாயிருப யோதரமுங் கல்லையோ வைத்த
தாகுமிடை யேயுடலி வில்லையோ பானு
மதனை மதிவழி தெரிய வலனல
முதிய படியிடை யுலவு மடியினை
மங்கசனூ லுரைசெய்பிர பந்தமே மேலும்
வெங்கதிரால லருமர விந்தமே (24)

காலவிரலோ செம்பவளம் போலுள்நீரைந்துங்கள்
களுமுலகு தித்தமதி பிம்பமே யிது
கிளையுடைய தென்னமதி நம்புமே வாசக்
கலவை யணிதன மலையை யிடை கொள
வலதி தலவல வொடியு மென விரு
கழலினும் புகுந்திடுஞ் சிலம்புமே தரை
விழுமழுந்தொழுமேழும் புலம்புமே (25)

வாலைவந்தபேதைமுன்பு மான்மிகுந்தவோதிமங்கள்
வந்தவ டனைத்துயர்ந்து நடக்குமே நடை
வந்திலை யெனத்தளர்ந்து கிடக்குமே மெத்த

வாமமிகு மயி    ராணி திருசிவ
காமியுருவசி    வாணியிவ ரிவள்
வாசிகண்டு நேசமாகப்    பாவிப்பார்    பல
வாசி சொல்லிக் கூசிடாமற்    சேவிப்பார்    (26)

அந்தரத் தொழிந்திடாதே விந்தையுற்றிலங்குதூசோ
டவனிமிசை யேயிருக்கு    மின்னலே    நுனி
சுவடுவரையே யினிக்குங்    கன்னலே    பூவா
ரறிவையர்கள் புக    ளதனை முனிவரு
மறியவரிமதி    தனிலுமொளிதரு
மாகமே குளிர்ந்த மணித்    தீபமே கண்டோர்க்
கேகமே பிறங்குமுழுச்    சோபமே    (27)

சந்ததம் பொடித்தடிக்கா வெந்தழல் விடுத்துருக்காச்
சரிநிருக்கா மாற்றுரைக்காச்    சொன்னமே    யிரு
கரமெடுக்கா வார்த்தழிக்கா    வன்னமே    அதி
சரச குணமுட    னுலக நடையுடை
யிரசமென மொழி    பழகி யுயிரொடு
தண்புவியுறை சிறந்த    வோவியம்    புகழ்
விண்பட வரைந்திலங்கு    காவியம்    (28)

யின்னவெழி லோங்கிவளர் கன்னிகையை யாங்குதளர்
வின்றி யடைந்தாலலோசி    லாக்கியம    உடன்
வென்றி மிகுந் தேறுமே நற்    பாக்கியம்    வெட்கா
திலகுமார்பினு    முரைசெய் நாவினு
முடியின்மீதினு    மழக மாதரை
யெடுக்கின்று ரரிவிதி சிவ    நாதனே யிப்பெண்
கிடைக்குமோ சரவணபவ    நீதனே    (29)

மன்னுகதிர் வேலனிட மின்னவகை நாரதனு
மாதரசி பேரழகைக்    கூறவே    குகன்
மூதறிவெ லாமழிபித்    தேறவே    மிக

மயங்கினன் மெலிந்தான  விந்துளங்
தியங்கினன் விழுந்தான  கந்தனை
  மறந்திட் டான்வலி யிழந்து  தூங்கினன்  யிடந்
  துறந்திட்டா னெழுந்திருந்து  மேங்கினன்  (30)

கந்தனின் செயலறிந்த வந்தின நமை முனிந்த
  கடவுளின் புதல்வனைச் சென்றே  யின்றே  சினந்
  தடரிமுன்பழி கொள நன்றே  யென்றே  யதி
காதன் மைத்துன  னுதலைக்கரு
தாது சிற்றறி  வாலகத்திடை
  கன்னல்வில் வளைத்துவாளி  பூட்டினன்  உடல்
  மன்னியல் பிளைக்கமேலும்  வாட்டினன்  (31)

நந்தன் மைந்தனன்மிகவுஞ் சிந்தை நைந்து பார்மருவி
  நாவரண்டு வேலவனுஞ்  சோபித்தான்  தன்னை
  மேவுகின்ற யாவரையுங்  கோபித்தான்  அக்கா
னடன மயிலென  முடிய விழமெலி
யிடைது வளவெழு  களப மிகுதன
  நங்கை தெய்வ குஞ்சரியுந்  தாங்கினள்  யிவ
  ரங்கமுய்வ தெங்ஙன் மென்  றேங்கினள்  (32)

3-வது வேறு சந்தம்.

அந்த நாரதனை முன்தெய்வானை யெனு
  மறிவையுத்தமி  கண்டு  மனத்
  தெறிவையற்றும  ருண்டு  சற்று
  மஞ்சிடாது வெ  குண்டு  யின்ன
தறைகுவாளதிக வினையமாக மொழி
யமரொணைச் சினங்  கொண்டு  (1)

தெய்வயானை சொல்லல்.

யிந்த நாதனையு கந்துபாதமுடி
  யேற்ற வந்து  பனியே  போன்ற
  வார்த்தை கொண்டு  தனியே  வெகு

யிதமுரைத்த முனியே யுட
விளைத்த காவலவன் வருத்தமாறுதலுக்
கேது செய்வ தினியே (2)

கண்டசேதிகளைக் கொண்டுமேவியுடல்
கனியவேவ யென தையா வொன்று
கற்றுவேனிது கையா தெனக்
கலகமானதை மெய்யா யோதிக்
காலம் போக்கு மிந்த்ர ஜாலம் பார்க்கி லெங்குங்
காண்கிலா முழுப் பொய்யா (3)

அண்டிநின்று நல்ல பெண்டதென்று சொல்லி
யாசைமூட்டி விட் டாயே யிந்த
வேசமாக்கி வைத் தாயே யிது
வடுக்குமோ புகல் வாயே மாதர்க்
காட்சிபோலெவர்க்குங் காட்டியே கொடுக்க
வகையெடுத்தவ னீயே (4)

நெஞ்சமீதி நய வஞ்சமேபதிய
நீதன்போல மேவியே யுத
வாத சேதி கூவியே யதி
நேசமாகத் தாவியே நிலை
நிருத்தவோ நசையைவருத்தினுயிதுவும்
நீதமோ சொல் பாவியே (5)

பஞ்சையான குறவஞ்சி மாதுனது
பந்துவாவ தில்லையே யெனிற்
சந்துபேசி நல்லையே யெனப்
பகர்வதேது சொல்லையே பஞ்ச
பாதகா வெனக்கு வாதி நீயுனக்குப்
பாரப்புத்தி யில்லையே (6)

கந்தவார்குழலை யுந்துகாதலொடு
கடிந்து நீயும் புல்லுவா யெனி

லடர்ந்தவேளை வெல்லுவா யெனக்
கந்தனேடு சொல்லுவா யென்றன்
கண்ணினீயுமினி நண்ணிடாது சதி
காரா சல்தி செல்லுவாய் (7)

சந்தமேவு கன்னியிந்த வாறுசொல்லத்
தவனுஞ் சித்தம் வியந்து கொளு
முவகையற்று நயந்து மதி
தவறிமெத்தப் பயந்து தேறிச்
சாற்றுவான் மொழியை மாற்ற மாயவளைச்
சார்புகொண்டு துயர்ந்து (8)

அன்னையே மிகவு மென்னை யேசுவதேன்
னகிலத்தோர்கள் விட்டிலே பேசும்
புகலைப்போலேன் பாட்டிலே சொன்ன
லவருக்கென்ன கூட்டிலே தினிட்
டடைத்திட்டாலுங் காடை நமைக்கிட்டாது ஜாடை
யறியாதோடுங் காட்டிலே (9)

யென்றவாறு போலவுன்ற னேடுகூடி
யினமும் புத்தியே வல்லை யவர்
மனமும் பற்றவே யில்லை மண
மிசைப்பதே பெருந் தொல்லை யின்னு
மேகினுற் றெரியு மோகத்தாற் பெறுத
லீது நல்லது மல்லை (10)

ஒருவருக் கிருபெண்ணு றுவதெப்படியு
ளுதித்ததாகினு மாது மதி
கதித்தபோதினுஞ் சாது குண
முறைந்துகூடினுங் கோது நீடித்
தோங்கியே யதிக தீங்கு சேருமெனு
முவமை நாளுந்தப் பாது. (11)

யிருடிசார்பின்வசை கருதி நாரதனு
மிசைக்கலான பொழுது தீரா
வசைக்கித்தாழி னுழுது வெங்கட்
கோர்க்கையாகப் பழுது பார்த்த
தேமகாமகிமை யேகென்றுளிருகை
யேந்திநின்று தொழுது (12)

ஐயமானமனம் நைய நாரதனு
மம்பையொத்திடுங் கண்ணி சொல்லில்
வெம்பலுற்றகங் குண்ணி யிந்த
வறிவுகெட்டதென் றெண்ணி விண்ணுக்
காரைக்கண்டு மனந்தேறிச் சென்றுபதி
யதணைச்சேர்ந்தன னண்ணி (13)

செய்யசோதி மன்னு தெய்வயானைபின்னுந்
தேசுகொண்ட நாதனை மலர்
வாசமுந்து நீதனை யையோ
சேர்ந்ததிந்த வேதனை யென்று
தேற்றி மாதவன்சொல் மாற்றவோதினள்கோல்
சிறப்பதான போதனை (14)

4-வது வேறு சந்தம்.

தெய்வயானை சொல்லல்.

காதலாகு காகிராத மாதுமீதமோகமாக்
காதல்கொண்டு சோபமுற லாகுமர் பூவி
லோதுபந்த மானவசை போகுமா (1)

முருகர் சொல்லல்.

போகுமா வென்றும்மயிலே யாகமேசேர்ந்தேனெனது
புத்தியவளைத்தழுவிக் கொண்டதே யினி
நத்திவரு விப்பனகை கண்டதே (2)

தெய்வயானை.

கண்டகண்ட தேயமெல்லாஞ் சென்றுசென்றியாருமண்டாக்
காடுறுங்கு றத்தியைக்கை தீண்டியால் அந்த
வேடருஞ் சினத்தடிப்பர் காண்டியால் (3)

முருகர்.

காண்டியென்ற மாதரசே யாண்டியென்றி நீதோதினையோ
கானவர்வலிமை சோர வாட்டியே வாறேன்
நானினி யவளை மாலை சூட்டியே (4)

தெய்வயானை.

மாலைசூட்டி வைத்தவென்னை ப்போலநாட்டி லுற்றபெண்ணை
மதிக்கிறு யெனக்கெவருமீ டுண்டோ மெத்தக்
குதிக்கிறு குறத்தி மையலே கொண்டோ (5)

முருகர்.

கொண்டகோலங் கண்டுதேற வுண்டகோரம் பொன்றுமாது
கூறும்வாறு சீருமாறி யேசாதே கடைத்
தேறுமாறு பாரு போராய்ப் பேசாதே (6)

தெய்வயானை.

பேசவில்லை யானுனக்கு ரோசமில்லையாகுறத்தி
பேரிலிச்சை வைத்துமருள் கின்றுயே யெங்கும்
நாறிலச்சை கெட்டுழறி நின்றுயே (7)

முருகர்.

நின்றுகொண்ட காதலோடு சென்றுகண்டம் மாதையாசை
நீங்கவிருசெங்கைகொண்டு முன்கையே பற்ற
வாங்குமுதிர் சங்கையன்று மங்கையே (8)

தெய்வயானை.

மங்கையாக நானிருக்க வங்குபோகவேதுடித்து
வருந்துறு யுனையுமேக விடுவேனு யானு
மிருந்தபோ தெனது வாழ்வு கெடுவேனு (9)

முருகர்.

கெடுவதேது நீயுமினி விடவொணுதமாதவளைக்
கெஞ்சியாவதுன்னுெடு சேர்ப்பேனடி யென்றும்
வஞ்சியாம லன்பொடு பார்ப்பேனடி (10)

5-வது வேறுசந்தம்.

தெய்வயானை சொல்லல்

பாரிலே கன்னிமார்கள்போ லென்ன
பலனடைந்திட்டேன் வந்து அண்டம்
புரவுமன்றிலோர் ஜெந்து கூடும்
பதியைநீக்கிமி டைந்து மறு
பறவையோடுறவறிவை யாவதைப்
பகருநீயுமி ரைந்து (1)

முருகர் சொல்லல்

கோரமாய் மொழிகூறினுலினிக்
கோதுசெய்தறப் பாது விதி
கூட்டிவைத்ததின் மீது வேறு
குறைகளெயுத வாது நீயுங்
குணங்கினுல தென் மனங்கொளாதுமுன்
கொண்டமாய்கைக்கிப் போது (2)

தெய்வானை

வலைச்சியாகித்தன் றலைச்சனேடதி
வாதுகொண்டிடு மன்னை யூட்டி
வளர்த்தநின்றனக் கென்னை மதி

வந்துசேர்ந்திடுந் தன்னை த்தானே
மதித்துப் பேசியிங்கிதத்தைச்சார்பவன்
மணந்ததேனென்னை முன்னை (3)

முருகர்

புலைக்சியாகினுங் கலக்கவேமனம்
பூண்டதேகொண்ட கோலம் மடப்
பூவையேயிந்த ஞாலம் யெங்கும்
புகலொணுவனு கூலம் காணல்
போதுமாதினலோது கோதெலாம்
பொருக்கலாவதென் காலம் (4)

தெய்வயானை

அப்பனே வசைசெப்பவேயொரு
வாடன்மேலிச்சை கொண்டான் மாலோ
டறிவிலாமொழி விண்டான் பல
ரகமெலாமிரந் துண்டான் அவன்
னசைச்சேயென்றும் யோசிக்காதென்று
மடையாயோமணம் செண்டான் (5)

முருகர்

செப்புறுயுனதப்பன் சேதி
தெறிந்திடாதவ னானே முனி
தேவிபாலிகின் றானே கண்க
டேகத்தேவந்த தேனே யெந்தத்
தேவனகிலும் பூவைசேர்வது
தேவையில்லை யென் பானே (6)

தெய்வயானை

பெண்டியாள்சொனுட் கொண்டிடாதவர்
பேதையாவது திண்ணம் அதி
பெருமையாய்ந்திடும் வண்ணம் போலப்
பேசுகின்றனை விண்ணம் சிரப்

பித்தி னூற்பெண்ணை நத்துறுயினிப்
பின்புசொல்வேனென் னெண்ணம் (7)

முருகர்

மண்டலாதியிலண்டினோர் சிலர்
வஞ்சிவார்த்தையை நாடி வேத
வாக்யமபோலக் கொண் டாடி ப்பண்டு
மாண்டபேர் கோடா கோடி கெட்ட
வழக்கமாய் வந்தபழக்கமீதென்றன்
மதியொன்றேபோதும் போடி (8)

தெய்வயானை

தும்பிரெண்டினைக் கம்பமொன்றினிற்
சூழக்கட்டிடிற் றோணும் அந்தச்
சூட்சம்யானின்னம் வேணும் யென்று
சொர்லினிற்காயாசங் காணும் சிறு
தொகையாண் மெல்லிதாகையாற்றள்ளுந்
தோசம்பின்புத்தி நாணும் (9)

வெம்பி வேலனுமன்பினுற்சொல்வி
வேகம்நன்றிரு வென்றான் போல
விணையமாகப்பு கன்றான் அக
மெலிதலாய்த்தனி நின்றான் வேட
மின்னையேமனமன்ன மாவடி
வேலனேகமாய்ச் சென்றான் (10)

ஒண்டியாய் முனிவிண்டகாதலிக்
குருவிலாதவன் வருத்த முற
வுருவிலாதவன் வருத்த வாளி
யுருவிலாதவன் வருத்த தலை
யோட்டினான் றலையோட்டினான் றலை
யோட்டினானிலை வருத்த (11)

புண்டரீகங்கைக் கொண்டகாரங்கன்
புதல்வன் பூங்கணை  தொடுத்தான்  வேலன்
புத்திசோர்ந்துபின்  பெடுத்தான்  வள்ளிப்
பூவைவாண்மலை  யடுத்தான்  திரி
புவனமாதருங் கவரும் வேடனைப்
போல மாவடி  வெடுத்தான்  (12)

வாளும்போரி வாளுங்காமுறு
வதனத்தேசசி  நலங்க  ளுடன்
மகரகுண்டலந்  துலங்க  வடர்
வனக்கிராதருங்  கலங்க  வளை
வரிவில்லோடுசங் கரிநலகாமகன்
வருகிறான்பணி  யிலங்க  (13)

தாளுமவார் குழல் வாளிவேல்விழித்
தையல் சுந்தர  வள்ளி  மிகத்
தழைத்தவேனலைப்  புள்ளி  னங்க
டாவிமாலொடு  கிள்ளி  ச்செலத்
றன்கையாய கவண்கலான்மணி
தன்னை வீசின  ளள்ளி  (14)

வந்தகீரங்கள் செந்துவாதிகள்
வானிலேநின்று  சலிக்க  க்குற
மகளின் கைக்கவை  பலிக்க  மதி
மயங்கச் சென்றட  னலிக்க  ப்பச்சை
மணியையாற்றிய துணிபினுற்கா
மருண்டிடாவணஞ்  சொலிக்க  (15)

அந்தநீலங்கன் சிந்துதேசுகண்
டாதவன்முகங்  கருக்க  வவ
னஸ்வங்கண்களைச்  சுருக்க  க்குற
வரிவையின்குர  னெருக்க  குக
னண்டினுனென்றுங் கண்டிலான் கண்டி
தறைகுவான்நகை  பெருக்க  (16)

## 6-வது வேறு சந்தம்.

### முருகர் சொல்லல்

மின்னே நடன மயிலே திசையுகிர்த்த
பொன்னே றனைய குயிலே வடு
விட நய னங்கனி ரச மொழி யஞ்சுக
மிடையும லங்க்ர்த சுபகுண சுந்தர
மேயாசையுற்றகண் மணியே தனித்ததுரை
யாயாகதித்திடும் பணியே (1)

### வள்ளி சொல்லல்

மன்னே யேனதைக் கிட்கிறாய் உனக்கதனு
லென்னே வீண் மொழி போக்கிறாய் சுரி
வரிகயலின்குல மிளிர்மணிநந்தின
மாவிலகம்பர மிசையுறைசெந்துவர்
வாயரைத்தனித் தண்டியே வரலாமோசொல்
பேயாவிவ்வெனத் தொண்டியே (2)

### முருகர்

மா தேயந்தர மட்டுமே வளர்ந்துபடர்
தா தேபைங்கனி கொட்டுமே தகு
மழைமிகு மாமா மரசுட் னேகடு
பிரமா மேவிய மலர்செறி பாதிரி
வன வேட்டையாட வுட் கொண்டேன் இந்நனமுனை
மன தேக்கமோடு கட்கண்டேன் (3)

### வள்ளி

ஈ தெநிறைந்த புத்தியே யலதுநிற்ற
நீ தேவனங்கள் சுத்தியே தினை
யினையிடர் மானிரை கடகரிமாபுலி
முயலரிகோநரி பரிமரையாழியை
யெய்தேகி டாது நில்லாதே யப்பாலெவரும்
வைதால டாது சொல்லாதே (4)

முருகர்

தே னே   வனமடமானே   யசந்துடனொந்
தே னே   வனமடமானே   னானைச்
சிந்தைபொருந்த நினைந்துவருந்தநி
ரந்தரகந்த மணிந்தபெருந்தனத்
தேசோங்கிவாழுஞ்   சுந்தரமே   நன்மொழிசொல
மா சோம்பலேலோபெண்   கந்தரமே   (5)

வள்ளி

ஈனாவுனக்   கடுக்குமா   யியற்கைப்புத்தி
தானாமனத்   துடிக்குமா   செரு
விடர்கணைவேடுவரெனது முன்னோதி
விரைவுடனாடுவரினியுறை வாயெனி
விடாடியோடக்   கொய்திடுவேன்   றலைகுருதி
காடோடிநாடச்   செய்திடுவேன்   (6)

முருகர்

தலையேயுனக்கதி   சொந்தம்   உனதுபைய
மலையேமயக்கிது   பந்தம்   செய்ய
தண்டா மரைமலர் கொண்டா னடர்கணை
விண்டா னணுவள வண்டா தருள்செயத்
தானாகவந்த   கற்பகமே   பெந்நாளுமறப்
பேனாசிறந்த   வற்புதமே   (7)

வள்ளி.

கலையாய்ந்தி டாத   முட்டாளே   யுனையொருத்தி
நிலைசோர்ந்து பேச   விட்டாளே   பகற்
காலத்தாதியை மேவத்தாமரை
மீதுற்றோனருள் பூவிற்கார்கணைக்
கண்ணாரையண்டினா   லச்சை   கெடவேபேசி
யெண்ணாமற் செய்குவார்   சிச்சை   (8)

முருகர்

வாதாடுகின்றா யென் கண்ணே யுனையல்லால்வே
றாதாரமுண்டோபின் பெண்ணே மலர்
வதனத் தேசசி லிலங்குசெந்துவ
ரத்தாரமு திணங்கி யின்பொடு
வருந்தாது தந்தெனைக் காப்பாய் யேதுசொலினும்
பொருந்தாது கந்தனை சேர்ப்பாய் (9)

வள்ளி.

மாதாசை ரோசமே பொன்றாய மடையாபின்னும்
வாதாசை யோகமே யென்றாய் வரை
வந்துடையார்கதி மலரிடையேசிவ
கந்தபிரான்மதி கபடிடையாதென
வையம்புகல்வதைப் போலே யுரைகின்றனை
யுய்யுமதிக்குறை வாலே (10)

முருகர்.

கனியே விளைந்தகற் கண்டே கொடியிடைமின்
மினியே துலங்கலர்ச் செண்டே மனக்
கவலையை யடியொடு கண்டிக்கும்படி
குவிதனவரைமுடி கொண்டொற்றுஞ்செயல்
கைக்கொண்ட மாதே யுன் பாதம் பணிவேனிதை
யுட்கொண்டு மேவாதன் னீதம் (11)

வள்ளி.

பினியேது மோதா தோடடா நீவந்தவழி
தனிலேகிராதா நாடடா தளி
ரிலைகவரலர்வன மண்டிக்குறவர்கள்
வலியுட னுனதுட றுண்டித்திடவிரைந்
தீதோவருவதைப் பாரு தரிக்கநினைக்
காதேநகருடன் சேரு (12)

## 7-வது வேறுசந்தம்.

அந்தமொழியோதிய காலே வனக்குறவ
ராசனொடதிவிரை வாலே வர
வாசைகொண்டவேலனவ
ளேசநின்றமீதடரு
மலரரும்பியண்டத்தின் பாலே வளர்ந்திலகு
மரிமரம்போலாகினன் மேலே (1)

வந்தவேடர்வள்ளியை நோக்கி முதிர்ந்தரச
மலிபலாமாவின்கனி தேக்கி மூசு
வண்டலர் நெருங்கவோங்கி
விண்டலமுறைந்தவேங்கை
வந்தவாறுஞ்சீரையுந் தூக்கி புரையெனவும்
வழுத்துவாளுவகையை நீக்கி (2)

(வள்ளி சொல்லலும் குறவர் சொல்லலும்)

தந்தையேயிம்மாவன மீது புதிதாய்வந்த
தருவரலாறேதெறி யாது வெனத்
தண்டுகொண்டவேடர்சினங்
கொண்டுகண்டகோடரியைத்
தாக்கிவேறுவேறாயிப் போது துணிதுணித்துப்
போக்குவோமென்றார்கடப் பாது (3)

சிந்துகணைவேடமன் சாது வதனாலிந்தச்
சீருரைந்தவேங்கையைப் பாது காக்கிற்
றேனேவென்றநங்குமரி
கானிலொன்றவிங்குவெகு
தேசுகொண்டபூவுட னீது யிங்கேயுறைதல்
மாசுகந்தமாமிது தோது (4)

யென்றலுமரத்திலோர் பல்லி சொலக்கிராத
ரீதுநலமாமெனச் சொல்லி நங்கை
யேயிராயென்றேயவர்கள்
போயினரந்தோநகர
மேகமாகக்கொட்டியோ டல்லி பொருந்துந்தட
மேயும்புனத்துற்றனள் வல்லி (5)

நன்றுநன்றெனவுமை மகன் தொண்டர்க்குதவும்
நாகரீகமானமு ருகன் குற
நங்கையின்பா லாசைநாட
வங்குமுன்போ லாகவேட
ராஜனுகி யந்தவா சகன் முகமலர்ந்துல்
லாசமாக வின்னதோ தினன் (6)

8-வது வேறுசந்தம்.

முருகர் சொல்லல்

மாதேவள்ளிக் குயிலே யொளிமிகுந்த
மரகதமே மயிலே
கோதே யுருகுதடி நசையான்மதி
குறைந்து வருகுதடி (1)

வள்ளி

ஓதாதேவீண் பேச்சே யினிநாடாதே
யுனதிருகை வீச்சே
வாதாடவந்த னேயோ வுனையுமிங்கு
வருவித்ததென் வினையோ (2)

முருகர்

காதற்சமுத் திரமே யுனதிகண்கள்
கதிர்பெருமஸ் திரமே
கோர்தறுசோதி மின்னே நசைகெடுத்தல்
குலத்தினுக்கீனம் பொன்னே (3)

வள்ளி

பாதகனைப் போலே மொழிகுளறிப்
பாவைமுன்வந் தாலே
நீதியோமானங் கெட்டுப்போமடாபோடா
நிமிடமிவடம் விட்டு (4)

முருகர்

போவென்றாற்போ கேனே மதிசிறந்த
பூங்கொடியே நானே
ஆவலாய்நீ நாடி வருவதொரு
வறமென்றறியா யோடி (5)

வள்ளி

பாவியே கூசாதே சிறியமொழி
பதரியே பேசாதே
பூவிலேவெட்க மில்லா தெனையடுத்தல்
புகழினுக்கேற்ற சொல்லா (6)

முருகர்

மருமலிரஞ்சி தமே யிருபொழுது
மரக்கொணுக்குஞ்ச ரமே
முரண்க ளெல்லாம் விடடி யிணங்கியொரு
முத்தமேநீ கொடடி (7)

வள்ளி

கருமமேயோ ருருவாய் உதித்தபாதி
காமெல்லர்தே வெருவாய்
வருமமோடா கெடுவாய் நிமிஷமுந்தா
மதியாமலே கிடுவாய் (8)

முருகர்

கலைகொள்கருஞ் சுரும்பே அருமையுள்ள
கானரசக் கரும்பே
பலகலைக்கிங் கிதமே கலக்கிற்றினம்
பணிகுவேனுன் பதமே (9)

வள்ளி

வலிமையைக் காட்டாதடா வனவிடத்தில்
மயங்கிக்கை நீட்டாதடா
தலைகுலைந்தோ யாயடா கலங்கிப்பர
தவித்துநீபோ வாயடா (10)

முருகர்

யிலகுரத்ந கரமே யினிக்குங்கான
விசைக்கிசைசு கரமே
கலங்காமனீ வாராய யெழியனெனைக்
கருதியேகண் பாராய் (11)

வள்ளி

குலத்தினுக்கீன மடா வெவருமிதைக்
குறித்திடின்மான மடா
உலுத்தனீ நில்லாதடா செல்லடாமொழி
யுரத்திங்கே சொல்லாதடா (12)

பொது

அரிவையிவ்வா றுரைக்க குகனைமல
ரம்படர்ந்தே நெருக்க
அறுமுகந்த ன்னையுமே யொருமுகமா
யமைத்தவன் பின்னையுமே (13)

உருவன்னக்கம் பளமும் கணிகையர்க
ளுகக்குமழ குளமும்
யெரிகதிர்க்கண்டி தூன்ன மிளிர்வயிர
மிழைத்தகடுக்கன் மின்ன (14)

பெரியகொண்டைச் சிரமும் மதிதியங்கப்
பிறங்குபீதாம் பரமும
சுரிமணிசேர் சரமும் மிளவுருவுஞ்
சுமுகவசி கரமும் (15)

பெருகவேமா வணிகன் வடிவுகொண்ட
பெருமான் திருத் தணிகன்
திரண்டவளையல் கொண்டான் விலைகள்கூறித்
தெறிவையைச்சென்று கண்டான் (16)

9-வது வேறுசந்தம்.

சுந்தரமிகுந்த புள்ளிமான் பிணையைவென்று
பைந்தொடியணிந்த வள்ளித்தேன் விள்ளுந்
திட்டவேறுகை கொட்டுமாவன
மொட்டியேவரு செட்டியேவெகு
துரிதமாயெங்கேகுறீர் நில்லும் யிவண்வருது
முறையுமூரும் பேரும்நீர் சொல்லும் (1)

கந்தனு மகிழ்ந்து முன்னமே யெனதுநக
ரந்தனை விளங்கு மன்னமே தென்றற்
காலே யனுதின மேவுபழமுதிர்
சோலையெனு நகராகுமெனதனை
கலைகளும் பணிந்த சங்கரி யெனத்தடையே
யிலைசிலம் புணிந்த சுந்தரி (2)

சொன்னமொடு கோதறு கொத்து த்துவர்வயிர
மின்னுவ யிடேரிய முத்து பசுந்

தோகையே மதுராபுரித்தலை
வீதியே விலைகூறி விற்றுளஞ்

சொக்கமாதர் மெய்த்திடு விந்தை த்தொடிவிடுத்த
சொக்கநாதன் செட்டி யென் றந்தை (3)

மன்னவன் பாலேபதி யெட்டி மிதித்துவாங்குந்
தன்னியன் சீதாபதி செட்டி மாமன்
வட்டிவுலகுள ரொட்டிலவர்தலை
குட்ட விருகைகள் கட்டவிடர்களை
வருத்துகின்ற கணபதி செட்டி துணைவனியான்
கருத்துகந்த வறுமுகஞ் செட்டி (4)

வன்னவளை கொண்டு நாடினேன் திசைதவரி
யின்னவளிகண்டு கூடினேன் பொரி
வண்டலம்பிய கொண்டையுஞ்சுரி
கண்டமுங் கயற் கெண்டையுங்கனி
வாயுமேசிறந்த நங்கையே தொடியணிவாய்
நீயுமே பிறங்க முன்கையே (5)

யென்னவடிவேலனுஞ் சொல்ல வனக்குறவர்
கன்னிசிறி தோதிடு மெல்ல யிந்த
வேனலுறு மரை மான லரிமுய
லானைபறவைக ளேனமிவைமன
தேங்க ஒலிக்கின்றதாய் வேணும் வளையலென்ன
பாங்கின் விலை சொல்கிறீர் காணும் (6)

காழாரமணித்தொடி மிச்சம் உண்டோன்
[றின் விலை
யேழுநூறுபத் தொரு லெச்சம் மாதே
காவினந் தருதேனிரம்பிய
வாவியெங்கணு மேயிலங்கிய
கட்டழகுடன்சி றந்துமே வக்காவிரிப்பூம்
பட்டணமிருந்து வந்துமே (7)

ஊழிமேகம் போற்றரு கையாற் புகழ்மிகுந்த
சோழ ராஜனுற்றுவ கையால் மொழி
யுருதிவர்த்தக முறைவிதிப்படி
பொருளளித்தவை பெருகவிற்பன
மோங்கமலர் மாதருள் பொங்க க்கவித்தொடர்பு
நீங்கிடுமெம் மாநகர் தங்க (8)

வெள்ளமொன்று பாண்டிய னன்று சோழம்புகுந்து
பள்ளிகொண்ட கோன்றனை யென்று சூழும்
வேலாவலை யந்தனிலிலகிய
நாலா வருணங்களி லதிவித
மேன்மை தங்க வர்த்தகந் தேரும் நகரத்தோரை
நான்பொருந்த விக்கணந் தாரும் (9)

வள்ளலே யென்றோதப் புகழ்ந்து பெறுதியென
வுள்ளமே நந்தாது மகிழ்ந்து நகர
வருணமுற்றவர் களையழைத்ததி
விரைவினுற்றன னகரிலக்கணம்
வடிவுகொள்ளரியூர் சுந்தரம் யிளையாத்தம்
குடியிருப்பதிலா குந்தரம் (10)

அன்றியு மென்னாட்டிலே யுற்று த்தினந்தினமும்
நன்றிபைதென்னாட்டையே பெற்று ப்பய
னடையுமென்றினி துடனூரங்கொளு
படையை வென்றதி ஜெயமிகுந்திடு
மன்னவருஞ் சென்னியின் மேலே கைகூப்பியேற்றுந்
தென்னவனுஞ் சொன்னதின் பாலே (11)

ஒன்றுகேளெழுபதி பெற்றார் சிறந்தமதிப்
பென்றுமே பெறுநக ரத்தார் யாரு
மோதுதற் கரிதான பொற்பண
மாதுலர்க்கிசைவான கற்பக

மொத்தளிப்பாரக்குண சீலர் நிலைதவரித்
த்தளிப்போருக் கனு கூலர் (12)

கந்தனத் தன்மாலடி பணிவார் திருப்பணிகள்
சிந்தையொத்தங்கேசெயத் துணிவார் பசுங்
கனகவணிமணி வடமொடழகிய
பனக மணிபவ னுடைய கழமுறக்
காதலுற்றுங்கேயடி நாடி மலர்கள்சொரிங்
தாதரித்தீய் வாரொரு கோடி (13)

அந்தமலிவான நகரம் மடந்தடங்கள்
நந்தவனங்கோவிற் சிகரம் கனிங்
தண்டருந்தரை கண்டிலங்கிய
வண்டினங்கொளு முண்டகந்தனை
யரனடிக்கிடவு மாகரம் கூப்பிதொழவும்
வரவிசைத்திடுவர் கோபுரம் (14)

சோலைசாலை வைத்துமே முடிப்பார் திருமொழிகள்
காலைமாலை நித்தமே படிப்பார் அருஞ்
சுருதிதேறிய கவிஞர்பாவினைக்
கருதியே யவரிதையம்போன்மகிழ்
தோன்றலெட்ச லெட்சமாய்க் கொடுப்பார் பவங்களென்று
லூன்றியச்ச மச்சமாய் விடுப்பார் (15)

சீலமாய்ச்சை வாகமம் வாழுவார் குகனடியை
மாவிலேற்றி நாடொறுந் தொழுவார் பேகுந்
தேசமெங்கணு மாசறும்படி
தேசுபொங்கிட வாசிதங்கநற்
றிரவியங் கொடுத்து வாங்குவார் அசத்தியர்க
டரமறிந் தொழித்து நீங்குவார் (16)

வெள்ளழவும் பொய்மொழி சொல்லார் நகரத்தோர்க்கே
வள்ளலெனுஞ் சொல்தகும் நல்லார் அவ

ரிருநிதிக்கிழவனை நிகர்த்தவர்
தருவையொப் பனமகிமைபெற்றவ
ரிறைவனுமதித்திடும் பல்லார் மணிகள்விலை
நிறையுடனுரைத்திட வல்லார் (17)

மெள்ளமெள்ளப்பாண்டியைச் சென்றே யவர்களிடத்
துள்ளமுள்ளக் காண்டியை யென்றே நீயோர்
மித்திரைக்கையி னிற் கொடுத்திடி
வித்தலத்தில்வி யப் புறச்சொன
விலையினையறிந்து கொள்ளுவாய் வளையவிட
மலைவிலை துணிந்து விள்ளுவாய் (18)

பச்சைவளை கோடிகைக் கொண்டேன் உனக்கெதன்மே
லிச்சையுரை யானெதைக் கண்டேன் யிதைப்
பார்த்தையாதொடி சாற்றுறேனினிப்
பூர்த்தியாய்விலை தேற்றுவாயெனிற்
பாவையேகு தேயிலைத்தத்தை மொழிபுகலும்
பூவையேநீதா தினம்பத்தை (19)

அச்சமில்லாதிப்படிக் கந்தன் உரைக்கவள்ளி
மெச்சியண்ணுவிக்கண மெந்தன் யிரண்
டங்கையினும்வெகு பொங்கமொடுதொடி
தங்கவிடுமென நங்கையுரைசெய
வவ்வணிகன்கன்னி கைபிடித்து வளையிடவுஞ்
செவ்விழிகண்மன்னி மைதுடித்து (20)

கொண்டநகை யோடிரட் டேற பெருநிதியைக்
கண்டதொப்ப வாசிமுற் கூற மலர்க்
கோதையகமிகு புளகமெய்தலு
மோதியரிமக னலரை யெய்திடக்
கூசியாசை யாறு பெருக்க வினியமொழி
பேசியோசி யாம விருக்க (21)

வண்டவேடன் கஞ்சிகைக் கொண்டு வரக்குகனுங்
கண்டவேட மன்றிதட் டுண்டு மிகு
வயதுயர்ந்தவ னெனமெலிந்துட
னடுநடுங்கிட வெதிர்நடந்தா
மந்திரஞ் சதாவுங் கூறியே வெண்ணீறணிந்து
கந்தரங்க டோறு மேறியே (22)

வேடராஜன் முன்பி லேகவே பணிந்திவனம்
நாடலேனென்னென்ப தாகவே கேட்க
விருத்தன்வெகு வெகு தலத்தினதியினு
மருத்திவலிகெட முழுத்தியிதுவழி
யேகமாக வேவரு கின்றேன் கன்யாகுமரி
போகமாறி யேதனி நின்றேன் (23)

காடுகண்ட நானுனைக் கண்டு மகிழ்ந்தேனதி
மாடுவிண்டி யாலதைக் கொண்டு செல்லக்
கருதினேனென மறவர்கோன்மன
வுறுதிசேருநல் விரதரேயிரு
கால்வருந்தப்போக வொண்ணாது முதியரேயென்
பாலிறங்கிச்சாரு மிப்போது (24)

தேடுதற்கறிய நாதனே யனுதினமும்
நாடலுக்குரிய சாதனே செய்யுந்
தேவனேயுறை பூவிலேயடி
யேன்முளைதி நீதிமாதவஞ்
செய்தபலனேவி ளைந்ததோ வெனதுதந்தை
யுய்தவறமாகி வந்ததோ (25)

ஆடுமயி லன்னவென் மாது தனித்திவண
மூடுபுன மன்னினள் சாது நீரு
மதனுடன்சில பொழுதிருந்துட
றெழிவடைந்தபி னதியடைந்திடு
மையனே பின்னேடுறு மென்றான் நகைபுரிந்த
துய்யனுக மாடிடச் சென்றான் (26)

வள்ளியில்லின் வேடனு மேவி மயிலையின்னல்
லுள்ளமுள்ள நாதனைத் தாவி ச்சொன்ன
விருதியின்படி யிவருளங்கனி
வுறநடந்திடி லதிநலந்தரு
மனமகிட்சியாகவே கூட்டி ச்செல்வாயெனலுங்
தனமடர்ச்சி யானசீ மாட்டி (27)
கள்ளமில்லா வன்பரே நீரும் அதிமெதுவாய்
மெல்ல நில்லாதென் பினே வாரும் யென்னக்
காத்து மணிவளை யாற்றவகமிக
விளைத்தமுதியனை யழைத்துமகிழொடு
கன்னிபாண்மீதினி லேற்றி க்கனியருந்து
மென்னவதுண்டேகளை யாற்றி (28)

### 10-வது வேறு சந்தம்.

வேலனுமாதிடத் திருக்க
நகை பெருக்க
வகஞ் சுருக்க மத
வேள்விடுபூங்கனை நெருக்க மலர்
விரைசேர்குழன் மடமான்வடி
யிடுதேனுறை தினைமாவினை
மென்றுதினுமெனக் கொடுக்க வதைத்
தின்று குகன்றலை நடுக்க (1)

### முருகர் சொல்லல்.

காலனைப் போலெனைக் கூவி
மிக மேவி
யுட லாவி தரிக்
காவழிகோறினை பாவி யப
கடமாயிது தினைமாவென
விடமானதை யுணவோதிய
கன்னியே யிப்பழி போமா பாவ
மன்னியே நற்கதி யாமா (2)

### வள்ளி சொல்லல்.

ஆதவா நானும்பேய் மாலம்
அனு கூலம்
செயத் தூலம் தனக்
காபத்துண்டாவதென் காலம் யிதை
யறியாதவ ரொருபாதகி
முதியோரென நினையாதட
மாகவதைத்தன னென்றே சொலத்
தேகமெடுத்தன னின்றே (3)

### முருகர் சொல்லல்.

தாதியே நீ விரைந் தோடி
நதி நாடி
புனல் தேடி க்கொஞ்சந்
தாக நீர்தாடி சிர் மூடி பெருஞ்
சதியைத்தரு முணவைக்கனி
வுடனுட்கொள மதிசெப்பினை
தாதென்ப தென்காத் தில்லை யிந்தச்
சூதண்டிவந்ததென் தொல்லை (4)

### வள்ளி சொல்லல்.

கேளையா மாமலை சருவி
வரு மருவி
யினைத் தருவி வழி
கீறியே நீரதை மருவி மனக்
கெலிவிட்டடர் புனலைக்கர
மலரொட்டதி விரைவிற்கொளுங்
கீர்த்தி விளங்க விப் பாரே புகழ்
சீர்த்தியுறுந்தவத் தோரே (5)

முருகர் சொல்லல்.

பாளையை மீறிய குழலாய்
அடி யழலாய்
ச்சுட சுழலாய் நதிப்
பாசியிலேகியே விழலாய் யுடல்
பதரும்படி மொழிகின்றனை
யிதுநன்றல மனதன் பொடு
பாதையைக் கூட்டிநீர் காட்டி விடா
தோதாதே போட்டி பா ராட்டி (6)

வாருமென்றே குற மாது
செலும் போது
கிழச் சாது வவள்
மாலைக்கொண் டேகிய மீது நதி
வந்தோ மிதினின்றே ஜெல
முண்பீர் மகிழ்கொண்டே யென
மாயவன்றுண்மீது பணிந்தே சொலத்
தூயனுண் டே தாகந் தணிந்தே (7)

தாருவென்றே துங்கை யனமே
குயி லினமே
நன்மோ கனமே செய்ய
தாமரை போன்றதுன் மனமே நாஞ்செய்
தருமந்திரு வுருவங்கொடு
புவிவந்தென வெவருஞ்சொல்த்
தாகத்தைநீக்கினை யுடனே கொண்ட
சோகத்தை போக்கலுன் கடனே (8)

11-வது வேறு சந்தம்.

வள்ளி சொல்லல்.

அத்தனைநினைத்து வந்தாயே கதியடைய மதிபெருகி
ஆசைவாழ்வைவிட்டே னென்றுயே யிப்போ
தறிவையார்களை வலியவேகொள
வுருதியாய் மொழிபுகலுறுயுனை

யண்டினு னுங்தோசமாகுமே யுனதுதவ மிசவுமவ
மருமையுங்குலேந்து போகுமே (1)

முருகர் சொல்லல்

முத்தணிமிகுத்த கோமளமே யுலகிலுற்றூர் விலேமதிக்கா
மோகமாகநத்து சாமளமே யாதி
மூவரும்பல தேவரும்புவி
யாவருங்கனி வாகமங்கையர்
முண்டகமனேய வத்தமே பிடித்துழன்று ரெனக்குமின்று
மோடிசெய்வதேவி யர்த்தமே (2)

வள்ளிசொல்லல்.

புத்தியைத்தொலேத்த மட்டியே யிதுபிழைப்பா வுனமதிப்பாய்ப்
போற்றலேமுழுதும் வெட்டியே பஞ்ச
பூதமோர்பட வேதமோதிய
சாதுபேதையர் காதலான்மையல்
பொங்கவெங்குங் கண்டில நீயே யுடறிரைந்துஞ் சிரம்வெளர்ந்தும்
பூவையின்மேலிச்சை கொண்டாயே (3)

முருகர் சொல்லல்.

நத்தணிநிறைத்த மங்கையே யெனேக்கைபற்றி யழைக்கநத்தி
நாடிவாடிசோதி நங்கையே தேவ
நகருளோருந னியமவாகம
முடையதேவரு மருகியேதொழ
நாகரீக மேவிய பெண்ணே தருமமுண்டு மனதுகொண்டு
நம்பினேனின்ருளுவாய் கண்ணே (4)

வள்ளி

சத்தியைந்துமற்ற கிழவா பாவமென்றெண்ணி வாவிகண்டுண்ணச்
சந்திசெய்தறத்தி விழவா மூடா

தாமிலாமொழி புகலுறுமிது
கருமமாவரு நதியிலேயுனைத்
தள்ளினுலுந்தோச மாகாது உனக்கொருத்தி வடிக்கநத்திச்
சாருவாளென்றெண்ணப் போகாது (5)

முருகர்

மத்தகம்நிகர்த்த தனத்தாய் யினிமைபெற்ற வுணவளித்து
மாசிலாதிலங்கு மனத்தாய் அந்த
மலரவன்கணை யுடலிடங்களை
வலியறும்பல தொளையிடும்படி
வஞ்சியாதுவந்து சேருவாய் தனம்பெருக்கும் நலங்கிடைக்கும்
மங்கையேபெருமை கோருவாய் (6)

வள்ளி

பச்சமிகவைத்திந் தக்ஷணம் மதிசிறந்து கனிவுகொண்டு
பார்க்கிலோமிருந்த லெக்ஷணம் ஒரு
பல்லுமேயிலைச் சொல்லிலேபிழை
நல்லமாதரைப் புல்லமாலொடு
பரதவிப்பதென்ன வாச்சரியம் ஐயோவிக்கோலம் பொய்யோ
[வித்தாலம்
பழிக்குமுன்னைச்சுற்று மாச்சரியம் (7)

முருகர்

மச்சவினமெச்சிடும் விழியே யொருபொழுதி லிருமருவி
மயங்கிடாதேயென்று மொழியே யென
வள்ளிவிரைவொடு தள்ளியுடல்படு,
கொள்ளியெனுமுரை தள்ளிவழியோடு
வலைகடந்த மானினம் போலே மனம்வெகுண்டு சலனைக்கொண்டு
மங்கைசெல்லுவேலனு மேலே (8)

சித்தியோடுபுத்தி மாதனம் அடியவர்கள் பெறவருளித்
தீரமாின்மோக்ஷ சாதனம் நல்குந்

தேவதேவனை மாவிசாலனை
யாபிபாலனை யானையானனச்
செம்மலைத்தன்முன்னம் வந்தானை த்தொழுதிரைஞ்சி மலிகுரிஞ்சிச்
சேயிழைமுன்சேரு மென்றானை (9)

நத்திவனமுற்று மாதங்கம் வடிவுகொண்டு சுமுகனன்று
நாடுகின்றவேட மாதங்கம் மிக
நடுநடுங்கிட மதமிகுங்கர
மதனிலைந்தரு வொடுசினங்தொரு
நந்தலின்றிவந்ததே முன்னம் பயமுடனே முதியனையே
நம்பிமாதுசென்றதே பின்னம் (10)

## 12-வது வேறு சந்தம்.

வள்ளி சொல்லல்.

வன்னமயிலன்னவுமை நாதா வெனக்
சின்னவிதிதன்னைமலர் வேதா வன்று
சென்னியறமன்னினது வாதா வடர்
வனவழியிடைமதமிகுகட
கரியிடர்செயவருகிறதிதை
மாற்றிடுவீரேழுலகு மதிக்கும் மெனப்
போற்றுதலாய்மாதவனைத் துதிக்கும் (1)

மின்னையடர்ந்துன்னுவடி வேலை க்கொண்ட
தன்னியனுஞ்சொல்லுமது காலை யடி
வின்னமறுகன்னலுரை வாலை மணி
விடமணிபாணிணையடிகளை
மறைவழிமுறையொடுதுதிசெயும்
வேளைமடமாதுவா ரீது சென்று
நாளைவருவாயகலிப் போது (2)

வள்ளி சொல்லல்.

தந்தமலிசிந்துரமும் நேராய்ப் பெரு
நந்தல்செயவந்ததிதைப் பாராய் ஐயா
பந்தமுடனென்றனிடர் தீராய் நாளும்

பரமனுமருடருமுனதிரு
வடியலதொருகெதியிலையினித்
தஞ்சமெனவேபலவும் படித்தாள் குற
வஞ்சிமுதியோனுடலம் பிடித்தாள் (3)

முருகர்

முந்தவெனையந்தமில னென்றாய் பின்ன
ரிந்தவழிவந்தலறி நின்றாய் வெகு
விந்தையொடுபிந்திவரி கின்றாய் கிழ
முதுகினிலிருதனமுடிவலி
கொடுதொளையிடினுயிரறுமென
மூர்க்கமதாயெண்ணினையோ பாவி யுன
தோர்க்கையிதோ பெண்ணெனலே நாவி (4)

வள்ளி

தஞ்சமெனும் வஞ்சியின்மேல் வாதா யிந்தப்
பஞ்சைவயினென்னெஞ்சமிரங் காதா மன
தஞ்சியுனைக்கெஞ்சுதல்பொ ருதா யிந்தத்
தரணியிலென துடனுயிருள
வரைமலரடி யணிகுவதொடு
தன்னுடையநோக்கமது போலே செய்வே
னென்முடையைநீக்கியதின் மேலே (5)

முருகர்

பஞ்சவர்ணரஞ்சிதமென் மாதே சினை
மஞ்சுகுழற்செஞ்சோனிலைக் காதே நீசெய்
வஞ்சமதுகொஞ்சமலத் தீதே யெண்ணிப்
பலவழியினு முறைகெடவிடர்
சிலபுரிமதி யுடனடைமடப்
பாவையரைச்சேரலவ தாறே யுன்றன்
தேவையுளபேர்களிடஞ் சேறே (6)

வள்ளி

வண்டவிபங் கொண்டபெருங் கோபம் தெறிந்
தண்டிவரும் பெண்டுபரி தாபம் ஆகத்
தொண்டு செயக்கண்டுமிது பாபம் என்
மனமதுபதி கிலையிதுசதி
யெனமடமொடுவிழிமொழிசொன
மங்கையிவளென்றெணி விடாது காவும்
பொகமுளவந்தனமிப் போது (7)

முருகர்

கொண்டனிறவண்டணைய கண்ணி யெணைக்
கண்டடருமண்டலரென் றெண்ணி மொழி
விண்டதெனபண்டுவலி நண்ணி யிந்தக்
குவலையமதி லறிவையாக
மளவிடலறி தெனமுதுமொழி
கூறியுள்ளுன்னுரைகள் மெய்யோ பதி
சேறமதிகொண்டுசொலும் பொய்யோ (8)

வள்ளி

யின்றுசெயுநன்றிமறக் கேனே யதை
யன்றிமகிழ்ந் தென்றுமுனைத் தானே யெங்கு
சென்றிடினுமன்றல் புரி வேனே தின
மிரைதிரைவளை யுலகினிலுறு
மிடரிடரிய மனுவரையொரு
வேந்தலெனக்கொள்ளலதி நன்மை வந்து
சார்ந்தவரைத்தள்ளலறி வின்மை (9)

முருகர் சொல்லல்.

மன்றதனினின்று நட மாடும் பரன்
வென்றவனு மென்று கதிர் நாடும் பூவி
லொன்றியுடல் கன்றவிளை வோடும் அதி

வலிமிருகணே தொடுமுனமிசை
வதுங்கிசமெனி லுறைகறையடி
வந்தவழி யேகமதி நோக்கும் மெனத்
தந்திசெல மாதுமிவை கேட்கும் (10)

## 13-வது வேறு சந்தம்.

### வள்ளி சொல்லல்.

மாதவனே யெனக்காதரவாரினி மானிலத்தின் மேலே மத
வாரணமேகிய காரணம்யாவும் வழுத்துவீரென் பாலே (1)

### முருகர் சொல்லல்.

காதலியேயுள தோதுகிறேனடி கானவர்கண் மாதே ஆந்தக்
கந்தரமாமதி மந்திரத்தாற்பெருங் காடுற்றதிப் போதே (2)

### வள்ளி.

பெண்மதியாலுன்றன் கண்ணியமான பெருமையறி யாத் ஞானப்
பித்தரைப்போலப் பிதற்றியதைக்கொள்ளும் பீடிலாதிப்போது (3)

### முருகர்.

கண்மணியே கிழவண்மையுளாளெனைக் காத்திருக்கின்றாயே யுன்றன்
காதற்கிசைந்தவ னுனலவேயுன்ன கத்தினைச்சேர் வாயே (4)

### வள்ளி.

ஆசைகொண்டேனெனை நேசித்துச்சேரென் றறைந்ததுவீண் [மொழியோ வுனை
யண்டியென்னுளினுந்தொண்டு செய்யாதேக லாவதுநல் வழியோ (5)

### முருகர்.

கார்சினியிற்பெண்கள் வாசமிகுந்திடுங் காந்தனைச்சேர் வாரே யல்லாற்
கானிலுலுந் திரைமேனி முதியனைக் கண்ணிலும் பாராரே (6)

வள்ளி.

ஆதரித்தோர்களுக் கோதியவார்த்தை யழித்திடப் போகாதே வந்த
வாபத்துத் தீர்ந்தபின் கோபித்துப்பேசுவுதன்புள்ள தாகாதே (7)

முருகர்.

யேதுமிலாவெனைக் காதல்கொண்டாடுவ தேந்திழைக்குத்தகுமோ நீயு
மென்னுடன்சேரிநான் சொன்னமொழி சிறிதேனுஞ்செவிபுகுமோ(8)

வள்ளி.

மாசறுமன்னெனை வாசிக்கினுமது வாகுமுதிர் வேதம் யென
மங்கைய ரெண்ணுமற் சங்கைசெய்தாலது மாறுதவன் னீதம் (9)

முருகர்,

தேசமில்லா வனவாசத்தி லென்னோடு செல்லலாமோ மானே புத்தித்
தீவிரமாய்ந்திடப்பாவையே சேரென்று செப்பலுற்றே னானே (10)

வள்ளி.

பாலையருந்தெனக் கூலிகொடுப்போரிப் பாரிலுண்டோவென் னையா
[முன்னம்
பண்ணிய புண்ணியம் நண்ணினே னின்னன்பு பாலித்தருளு
[மெய்யா (11)

முருகர்.

காலுமசந்து மென்மேலுந்திரைந்துமு கஞ்சுரித்துப் போச்சே யெனைக்
கண்டுங்கொண்டாடுத னன்றன்றுலகுள கன்னியருக் கேச்சே (12)

வள்ளி.

தாலத்திலேயெனைப்போல் வெற்றிநாதனைச்சார்ந்த பெண்ணொரு
முண்டோ. [கொண்ட
தாமத்துக்காகநின் வாமத்தைச்சார்ந்தத த்தையலர் வார்த்தை
கண்டோ (13)

தாமம்-அஞ்சத்தக்கது வாமம்-இடதுப்பக்கம்

வாலைமனத்துன்மை வேலனறிந்துதன் வாசச்சொரூபங் கொண்டான்
[வள்ளி
மானையழைத்ததி யாதரவாக மயங்காதே யென்ன விண்டான் (14)

சுந்தரஞ்சேர்வள்ளி சிந்தைமகிழ்ந்துதன் ரேழனைக்கண்ணுறக் கண்டு
சோதிமணித்தனம் வாறுகிழியத்துலங்கி வெகுண் டேற (15)

கந்தனுந்தத்தைமுன் சொந்தமென்றெண்ணிக் கனிந்துகலந்து புல்லும்
[வாசி
கண்டுகுக னெனக்கொண்டடிபோற்றியக் கன்னியிவ்வாறு
சொல்லும் (16)

## 14.வது வேறு சந்தம்.

### வள்ளி சொல்லல்.

சித்தியொடு புத்திதருஞ் சீலா சிவ
பத்திமிகுஞ் சத்தியருள் பாலா வந்து
சேவடி கொடேவரனு கூலா
வெகு கோலா
கல வேலா வலி
சேரவடர் சூரர்குல காலா (1)

யெத்தரையுஞ் சுத்தியுரங் கொண்டு வரு
மத்திமுகனித்தவயில் விண்டு மயி
லேறியிடையூரிடாக் கண்டு
வண்ட ரெண்டு
செயிற் பண்டு முத
வீடுசோலநாடிலெவ ருண்டு (2)

கன்னிகையின் சின்னமதி யாலே புகல்
வின்னமொழிதன்னையுமிக் காலே மதிக்
காதருணின்பாதமினி மேலே
யதி மாலே
முது நூலே யிந்தக்
காசினியிற்பேசுவதைக் கோலே (3)

| | | |
|---|---|---|
| கன்னலரிமன்னகரை | யெய்யா | துறும் |
| வன்னவரைதன்னிவளர் | துய்யா | வுருக் |
| காமனிலும்வாமமிகு | மெய்யா | |
| திரு | வைய்யா | |
| புரி | யையா | வுனக் |
| காளடிமைநானுதிரிக் | கையா | (4) |
| அட்டவரையொட்டுபுயங் | கும்பம் | முகங் |
| திட்டமுளவட்டமதிப் | பிம்பம் | பசுங் |
| தாகமிளிராகமிகி | டம்பம் | |
| கரங் | கம்பம் | |
| பதங் | தம்பம் | யெனக் |
| காருமிலைநீவேறெவரு | நிம்பம் | (5) |
| சிட்டர்தொழுங்கட்டழகை | யேற்றி | யுனைத் |
| தொட்டுடலமுற்றும்நறை | யாற்றி | மிகு |
| தேசுபெறத்தூசுபணி | சாற்றி | |
| சர | மாற்றி | |
| மலர் | தூற்றி | யுனைச் |
| சேரவிழிபாருபதம் | போற்றி | (6) |
| பண்டுமறைதொண்டுசெயுங் | கோனே | யெனக் |
| கண்டுகுகன்வண்டுவிழி | மானே | யுயிர்ப் |
| பாவையேனுங்கோவையிதட் | டேனே | |
| யுனை | யானே | |
| மரக் | கேனே | யிந்தப் |
| பாரறியுமாறுகைவி | டேனே | (7) |
| அண்டமுறுங்கொண்டலெனுங் | கோதே | யென்றுந் |
| தொண்டெனலும்விண்டுடறங் | காதே | யெனக் |
| காதரவிங்கேதடியென் | மாதே | |
| வருந் | தாதே | |
| புவி | மீதே | சிறப் |
| பாகவுனைடேகறவ | ராதே | (8) |

இடம்பம்-பெருமை,

## 15-வது வேறு சந்தம்.

அந்தமேவுகந்த னந்தவேளைமன தஞ்சியே
நகை மிஞ்சியே
குற வஞ்சியே யுன
தகத்தையேமருவிச் சுகத்தைக்கோலிடெனக் கெஞ்சியே
சொல்லுங் கொஞ்சியே (1)

வள்ளி

தந்தியேகமொழிதந்திராவெகுவி சாலமே
யிந்தச் சீலமே
யலங் கோலமே யின்று
தனித்துப்போகுமென்னை மனத்துளேகொளலெக் காலமே
கரு வேலமே (2)

முருகர்

தங்கத்தாகமதிற் பொங்கமாகவந்து தாவியே
யுனை மேவியே
பின்பு கூவியே செல்லத்
தக்கதாயவிலம்புக்குறேனெனது தேவியே
யென தாவியே (3)

வள்ளி

அங்குதாவினுட றங்குமாசெவித பூரிக்குமே
மத கரிக்குமே
மனஞ் சுரிக்குமே யிதை
யண்ணன் மாரறிகிற்றிண்ணமாகப்பரி கரிக்குமே
புவி சிரிக்குமே (4)

முருகர்.

வம்புபூண்டுமனம் வெம்பியேகவின்ன மாறியே
மெத்த மீறியே
மொழி கூறியே நில்லாய்

மனையிலேகிவெகு கனிவதாகவெனைக் கோறியே
யிரு தேறியே (5)

சம்புபாலன் மொழி நம்பிமாதுபதி தன்னையே
யுற மன்னையே
கொளச் சன்னையே கண்டு

தாதிசாதுவாகவிதை யோதுமென தன்னையே
யெனப் பின்னையே (6)

## 16-வது வேறு சந்தம்.

### தாதி சொல்லல்.

மங்கையே யங்கத்தின் முன்னமே யில்லா
வடுவாகச் சில பின்னமே வந்த
வாறென்னசொல்லுவா யன்னமே சற்று
வளைவாகிய பிறைபோலுகிர்
படுகூரினை விடவேல்விழி
மாதர்கண்டால் வெகு சின்னமே புத்தி
வரவில்லை யுனக் கின்னமே (1)

### வள்ளி.

சங்கை கொண்டாயடி தாதியே நறுந்
தாதெடுத்தே முடி கோதியே சூடத்
தார்வனந் தன்னிற் செம் பாதியே சென்று
தழைதாருவி லுரைகாலையி
லதிகூர்மையு டைய சூரைமுட்
டைத்ததக மெங்கு மோதியே யிதைச்
சார்ந்து பார்த்தாகிலுஞ் சோதியே (2)

### தாதி.

கன்னத்திலு மிதழ் மேலுமே தந்தங்
களின்குறியுங்கட்ச் சேலுமே கொவ்வைக்
கனியொத்த தெந்தக் காலுமே யுண்மை

கழறுதது தரமேயிலை
யறிவாளென வுணராதுகை
காட்டுகிறாயொரு வாலுமே லுறிற்
கானடை வாய்நரி போலுமே (3)

வள்ளி.

வன்னக் கிளியொன்றைக் காட்டிலே தேடி
வளர்க்கவே மணிக் கூட்டிலே விட
வைத்திருந்தேனதன் பாட்டிலே செல்ல
வளையேயிரு காமீறிய
தெனதானன மிதமேழகமும்
வரண்டிற்றேற ரவிச் சூட்டிலே கண்கண்
மாசிவப்பாகாதோ நாட்டிலே (4)

தாதி.

ஆடனை நீ யுற வாடியே நிறை
யழித்தாயே குடி கேடியே யென்னை
யதட்டுறாய் குறம் பாடியே யென்று
மவுழாமல ருறையோதியும்
உலைவாகின விலைவாசனை
யமட்டுதே யிதை மூடியே வைத்திட்
டாலும் வெளிவரும் நாடியே (5)

வள்ளி.

சேடியே யானிந்த வழியையே நாடித்
தேனுறையுந்தருக் கழியையே வளைத்
தேனது சிக்கியிப் பழியையே கொள்ளச்
சிகையானத விழலாகின
மலர் வாசனை யுடலேற்றின
தென்படாயாதொரு மொழியையே சொன்னாற்
றெய்வங் கெடுக்குமுன் விழியையே (6)

தாதிசொல்லல்

நான்சொலினுயாசங் காணுமே பூரி
னுஞ்சகமனங் கோணுமே தந்தி
னுற்றுரும்பாகுங்கற் றாணுமே கட
னடுவேசுடுமழன் மீதொரு
குளிர்தாமரை மலர்பாரென
நவில்வதைநம்ப வேணுமே யிந்த
நாட்டம்வராவாத் தோணுமே (7)

வள்ளிசொல்லல்

மானமறைசூழ்காட்டி லோண்டியே சென்று
வந்தகழவைநீ கண்டியே யெனின்
மதிவரும்படி தண்டியே முழு
மடமேயொரு சிறியாளென
வுணராதப கடமாயுரை
வழுத்திநில்லாதே யண்டியே சுத்த
மானமில்லாப்பெரு லண்டியே (8)

யென்றடமாய்வள்ளி கூறவே தாதி
யென்செயுமம்மொழி மீறவே யேலா
திடைந்தகந்தேறி மாறவே யுனக்
கினிதாகிய படிகோறுக
வெழியாருரை செவியேறுத
லின்றல்ல வென்றுகா லாறவே விரைந்
தேகநினைத்தக மேறவே (9)

மன்றலந்தார்வள்ளி முந்தவே சொன்ன
வருதிபோலின்னங் கந்தவே ளிங்கு
வாராதென்னென்றகத் துந்தவே வளர்
மதியோடலர் முடிசூடியு
வரையானருளிய சேவகன்
மயிலின்றேசெங்குன் சிந்தவே நய
வஞ்சத்தாதியிடம் வந்தவே (10)

### 17-வது வேறு சந்தம்.

முருகர் சொல்லல்.

வந்தப்பதியணுகி விந்தைக்குறியதந்த்ர வாதியே
யருமையுள தாதியே யிங்கு
வாவென்றுனசுரை யேவென்றுனும்பல வோதியே (1)

தாதி சொல்லல்.

கந்தப்பனுமிமொழி சிந்த்ச்செவிபுகுந்தக் கன்னியே
யிருகரமுஞ் சென்னியே வைத்துக்
கழலிலேபடியத் தொழுதிணுண் மிகவு மன்னியே (2)

முருகர்.

யெல்லைக்கவிரவி செல்லிச்செகமதனி லேறுமே
பொருள்பலவு மீறுமே யாரு
மீடிலாதுமதிகூடி வாழ்கவெனக் கூறுமே (3

தாதி.

நல்லக்கையணிபரன் செல்லக்குமரவரு ணுட்டவே
டருக்குருவங் காட்டவே வந்த
நாதனேபணியையோத வேணுமெனக் கேட்டவே (4)

முருகர்.

வஞ்சச்சமணமன தஞ்சச்செய்யும்நயன வல்லியை
ச்சுகுணவள்ளி மெல்லியை க்கொண்டு
வாழ்கசீயுமொரு தாழ்விலாதமொழி சொல்லிலை (5)

தாதி.

பஞ்சைக்குறவர்கனி நெஞ்சத்துணிதுகுறிப் பறியுமா
யெதுசொலினும் தெறியுமா சிறு
பாவையாளுமது தேவையாளனபடி செறியுமா (6)

176338
600 008.

முருகர்.

மங்கைப்பருவமட நங்கைகுறிலருகின் மருவுமே
வதுவையையுந் திருவுமே என
வழுத்துமேமிகுந்த வழுத்தமாகவெந்தத் தெருவுமே (7)

தாதி.

சங்கத்தொருகனிகை பங்கப்படவயிலிற் றுவியே
மடமையொடு மேவியே செல்விற்
றுலத்தார்களுமக் கோலத்தேகுவரோ வாவியே (8)

முருகர்.

அன்பற்றடானங்கன் றன்னைக்கனன்றிடமுத் தாரமே
யணிகுணவிஸ் தாரமே கொண்ட
வருமைமாதினெடு வருவையாலதுப காரமே (9)

தாதி.

வம்புக்குறியவிதைக் கெப்பிப்பலமுறையும் வாதித்தே
யெனதுமனஞ் சோதித்தே நீரும்
வழுத்துரீர்மிகவு மழுத்தமாய்பலவும் போதித்தே (10)

முருகர்.

வண்டுக்கணிவளியை யண்டிக்கனிபெருகு வணத்திலே
யுடனழைத்தி க்ஷணத்திலே வரின்
மதிக்கும்பாரென்மனங் கதிக்குமேயுனது குணத்திலே (11)

தாதி.

வண்டக்குறவரிதைக் கண்டிற்கவலைகொடு மல்லுவரர்
பிழிமொழிகள் சொல்லுவார் மாதை
வருவித்தாலதிகசிரத்தை யோடெனையுங் கொல்லுவார் (12)

---

வணம்-உத்யானம் பூந்தோட்டம்-வநம்

கன்னிக்கடுமை பயந்தன்னைக்குமரகுகன் கண்டனன்
தெளிவுசெய்து கொண்டனன் மலர்க்
காட்டுக்கேவளியைக் கூட்டிச்சார்கவென விண்டனன் (13)

வன்னக்குருபரனை மன்னித்துதிசெய்தந்த மாதுமே
வள்ளியிடத்திற் போதுமே தலை
வணங்கியாவலுடனிணங்கவேயிம்மொழி யோதுமே (14)

18-வது வேறு சந்தம்.

தாதி சொல்லல்.

தாயேவள்ளி மாதே பஞ்ச
தருவேமலர்க் கோதே யிரு
சரணஞ்சரணமந்தக்
கரணங்கரணமென்னைத்
தறிக்காதுருந் தேனே யுனைத்
தஞ்சமடைந் தேனே (1)

வள்ளி சொல்லல்.

நீயேமுன்ன மடுத்தாய் கன்னி
நெறியாவையுங் கெடுத்தாய் பல
நினைந்துவருந்தமொழி
புனைந்துகடந்துனது
நிலைக்கேசென்றி ட்டாயே வந்த
நேர்மையுரைப் பாயே (2)

தாதி.

யேதாவது கோது செயி
னெஜமான்மதிக் காது மன
திரங்கியடியவர்கண்
மருங்கிலுதவிபுரிந்
திருப்பாரெனும் நூலே யுணர்
திரங்காயென்றன் பாலே (3)

அந்தக்கரணம்-மனம் கரணம்-அறுதிச்சீட்டு
தறித்தல்-வெட்டல் உரும்-விடுதல் மருங்கு-பக்கம்

வள்ளி

ஓதா மொழி யோதி வர
லுதவாதடி தாதி யினி
யுனது கடமைகளை
மனது மகிழவினி
துகந்தேயிசைந் திருப்பாய் யெனி
லுறுமே செல்வம் பொருப்பாய் (4)

தாதி சொல்லல்,

மானே யினி நானேயுன்றன்
மனம்போனடப் பேனே யிந்த
வனத்திலெழிலை யொருதினத்து மாவிறையும்
வழுத்தானெனில் வழியே யிதை
வகுப்பாரெவர் மொழியே (5)

வள்ளி

தேனே யங்கு தானே சென்று
திரிந்தேன் வருந் தேனே மிகச்
செழித்தமது மலரும் பழுத்தகனிவகையுஞ்
சிறப்பாயுறக் கண்டேன் சற்றுந்
தெவிட்டாது கைக் கொண்டேன் (6)

தாதி.

மாமாதுளை பலவும் அகின்
மருதம் விசும் புலவும் முல்லை
மல்லிகை செண்பகம புன்னை யல்லிகடம்படர் கொன்னை
மலர்மேவிய வனத்தே சென்று
வருவோமிந்தத் தினத்தே (7)

வள்ளி.

வா மாமலர் பறித்தே யிங்கு
வருவோமிதைக் குறித்தே பதி
வந்தபினன்போடுமெல்லத் தந்தையிடந்தனிற்சொல்ல
வருவாயெனி லேசி நமை
மதிக்காதடி தாசி (8)

தாதி.

நாமே செலும் போது வந்து
நவில்வா ரெவ ரோது மட
நங்கையேமலையை வென்றமங்கையே வனம்புகுந்து
நறுமாமல ரெடுத்தே வர
நடப்போம் வழி தொடுத்தே (9)

வள்ளி

காமேவிய வனமே செலக்
கனிவாய் நட முனமே யெனக்
கன்னியரிருவர்களு முன்னிமனமகிழொடு
காமோர்படக் கோர்த்தே மலர்
கனியாவையும் பார்த்தே (10)

தாதி.

பூங்காவினை யடுத்தே வந்து
புகுந்தே மல ரெடுத்தே யிங்கு
புக்குறேனென்றினிதோதி யெக்கியேயன்புளதாதி
பூவைதனை யிருக்க வைத்துப்
போனுடைமை நெருக்க (11)

பாங்கார் வள்ளிக் கனியே யங்கு
பதிவாய்த் தன்னந் தனியே யுறப்
பார்த்திருந்த வேலனிது நேர்த்தியென்பதாகவெகு

பறிவாய்வந்து நாட வள்ளி
பணிவாகக்கொண் டாட (12)

சேனுபதி யடியே தொழு
தெழுந்தாளந்தக் கொடியே யுயிர்ச்
சித்திரத்தைக் குகன கம் வைத்தழுத்திக்கனிவுறச்
செழுஞ்சோலையிற் சார்ந்தான் நகை
தெளிந்தே களி கூர்ந்தான் (13)

வானுடுறை மின்னை யொத்த
வளிசேவகன் றன்னை மதி
வதனத்தியைந்தழுத்த முதவிக்கரங்குவித்து
மனதார முன் சொன்ன படி
வாராதென வென்ன (14)

பாவாயுந்தத் தாதி யிடம்
பகர்ந்தேயுனக் கோதி கிளை
பாந்தவனத்தில் வந்து பொருந்தவழைத்துவரும்
படிசெய்தவ னனே யெனப்
பகர்ந்தாயை லோனே (15)

தேவாயிந்த் நேசம் தந்தை
தெறிந்தா லதி மோசம் மெயனைத்
தீவிரமாய் நீரழைத்துப் போவதுவே ஞாயம்விட்டுச்
சென்றுற்றறிக் கேனே யெனத்
திகைத்தா ளந்த மானே (16)

பாகார் மொழி யாளும் சிவ
பாலன் குக வேளும் யிது
பகரும்பொழுதுபலவகிதும்பெருகுவனம்
பறிந்தேகிய பாங்கி வந்து
பணித்தாளடி தாங்கி (17)

வாகாயிரு கன்னி யையு
வடிவேலனு மன்னி அந்த
வனத்தி னதிசயங்களனைத்து மகிழ்பொருந்த
வகையாயெடுத் திசைக்க வந்த
மாதரகம் நசைக்க (18)

யேகாம்பர சேயே சொலு
மிதமாய் வள்ளி நீயே புட்க
ளினத்தை யடர்ந்து தினைப்புனத்தையடைந்துதறித்
திருப்பாயெனிற் பின்னே யுனை
யெடுத்தேகிறேன் மின்னே (19)

போகாயெனச் சிந்தை நொந்து
பூவை வள்ளி தந்தை வினை
பொருந்து தினையறுத்து வருந்தவெனையழைத்துப்
புகுவார் பதி நாடி யெனப்
புகன்றாளுடல் வாடி (20)

மலாய் மயங் காதே யுங்கள்
மணிமாளிகை மீதே யுனை
வைத்து வளர்த்திருக்கினுஞ் சித்தமருண்டிடச்செய்து
வருத்தி நடப் பேனே யென
வகுத்தானயி வேனே (21)

கோலாகலக் குமரா வெனை
கோரியென்று மமரா நசை
கொடுத்து வருத்தமுற விடுத்து நடப்பது சத்
குணமாவெனச் சகல கலைக்
குறமானது புகல (22)

கேளாய் நவ மணியே திருக்
கிளர்காஞ்சனப் பணியே யுனைக்

வருத்தி-வருவித்து

கிருபையொடுவருத்தி யருகுபெறவிருத்திக்
கெடிக் கேகுவே ஞகை வெனக்
கிறியே குக னேக (23)

வாளார் விழி வள்ளி பணி
மாதோடடர் புள்ளி மயில்
வளரும்வனங்கடந்து விளையும்புனம் புகுந்து
மருமாமலர் புனைந் தாள் மண்
மகிழ்வாய்ப் பரணிருந் தாள் (24)

19-வது வேறு சந்தம்.

செந்தாமரைக்கரத்தி நந்தாதொலிக்கவளை
செறிவளியத்தினை விளைபலனைக்கொளத் தேடியே வந்து
திரிகிறபுட்குல மதனைவிரட்டுவ ணடியே (1)

அந்தாரணிக்குளொட்டி வந்தேயிரக்கிலெட்டி
யடிகொடுதைத்திடமெலிபவரொப்பன வாகவே புட்க
ளலறிமலைக்குகை யதினுமரத்தினு மேகவே (2)

வெங்கோபமுற்றகரி சங்காடவெட்டுகணை
விடுகுறவர்க்கதி பனும்விளைநற்றினை மேவினுன் மிகு
விகசிதமுற்றிய மகளையுரத்தொடு கூவினுன் (3)

பங்கேருகக்குமரி யுங்காதலிக்கவளர்
பவளவிதட்கனி ரசமொழிசொற்றவிற் பன்னியே பதி
பரவுதகப்பனை யடிதொழலுற்றனள் கன்னியே (4)

கண்டேமகட்கிதனை விண்டானரைத்ததினைக்
கதிர்களைவித்தரிகளை மிதியிட்டடர்கள் டின்றே விட்டுக்
கருதுபணிப்பெணிெ்னடு மகிழ்வுற்றடைவீ டென்றே (5)

கொண்டாடுவேலனினி யண்டாதென்றேகனிதன்
குலைபதாத்தினை விளைவிலைமுப்பது பகலுமே சென்று
குறைபடிலுத்தமமென மனனுக்கது புகலுமே (6)

அஞ்சாதமன்னனவ னெஞ்சாரவுன்னியிதை
யரிவதுதப்பித மலவெனவக்கனிக் கோதினன் வேட
ரணைவருமக்கணம் வரவொருகைக்கிளை பூதினன் (7)

கஞ்சாமயக்கமுட னெஞ்சாவனக்குறவர்
கரகமலத்திடை யரிகருவித்திர ளோங்கவே வந்து
கடகரியொத்திடுமிறைவனை மொய்த்தடி தாங்கவே (8)

பின்றேதினைக்கதிரை நன்றாயறுத்துமிதி
யிடுபலனைக்கடிமனை கொடுபுக்கென வேவவே வேட
ரிறைபவனுரைப்படி பலனெடுநற்பதி தாவவே (9)

பொன்னார்புயத்திறையு மின்னேரிடைக்கனியைப்
பொறையருமைக்குழ லடிமையொடத்தினம் போற்றுமே தினைப்
புனவரைவிட்டக மடைகென்முற்றுரை சாற்றுமே (10)

அத்தாதியுஞ்சிறந்த முத்தாலமும்புகழு
மறிவையுமட்டுமிழ் சரமொடுசிற்றிடை யாடவே தந்தை
யுறையுமொழிப்படி யனைமகிழுப்பதி நாடவே (11)

நத்தாலுழைந்து பெற்றமுத்தாலலங்கரித்த
நனிமலர்மெத்தையினுறு மறவக்குல நாரியே மிகு
நசையடிமைக்கனிமகிழ்வுடனுற்றனள் சேரியே (12)

### 20-வது வேறு சந்தம்.

மதியொத்தமுகங்கை மலையத்தனையிறைஞ்சி
வருவித்தகுறவஞ்சி வள்ளியே மரு
மருவக்குகனை னெஞ்சி னள்ளியே மிகு

மாலினேடுறை ..லயாதவ கோகுமாரன மோகமாயடர்
மதுமொய்த்த மலரம்பை யேற்றுமே யந்த
மதனைப்பன்முறைவெந்து சாற்றுமே (1)

வள்ளி சொல்லல்

மதியப்பகைசுமந்த மசியத்தினிடைவந்த
வனிதைக்கு ளெனையிந்த வேதனை செய
வனசத்தை விடுவென்ற போதனை சொன்ன
மாதராரது கோலியோ பரன் மாவையேவிய வாளிபோலுள
வசிபெற்றகணையைந்து மேவுறாய் மன
திசை வற்றுடல மெங்கும் தூவுறாய் (2)

வரியுற்றெழுகரும்பு வளைவைக்கை தொடுகின்று
மதியக்க விகைகொண்டு கூவியே யதி
சதியைச்செய் தடர்கின்ற பாவியே மட
மாதியானுசெய்தேன் முனுளுன தாகமர்சுற மோதனுதியை
வலுவிற்கொலல் சிறந்த வாண்மையே யது
வலதிக்கதி யிகழ்ந்த தாண்மையே (3)

சுரிநத்தை வரிநந்து துவரட்டை யுரைசிந்து
தொடுவிட்ட புவிவந்த பெண்ணிலே துயில்
வடியிட்டதுகள் கொண்டுன் கண்ணிலே விழத்
தூவுபாதகி நானெனுமல ரேவியாவியை யோயவேசெயத்
தொடிகட்டி வருகின்ற காதகா நக
வுடலற்றுலவு பஞ்ச பாதகா (4)

அரியட்டகிரி யொன்று மரியைத்தலை சுமந்து
மமரர்க்கமுது தந்துங் கண்ணியம் மிகச்
சுமரக் கருதிவந்த புண்ணியம் களை
யாசிகூறியகாலுமே சிறு தோகையாவிகொள் காலனுகிவந்
தவனிக்கு ளொளிமங்க வைத்தயே யினங்
கவனித்துப்பழகிந்த வித்தையே (5)

கரியைத்தனது செங்கை படவெற்றியுரிகொண்டு
கலைகட்டி யருள்கின்ற பாலனை யென்றன்
நிலையைக்கருதிவந்த வேலனைக் கண்டு
காதலார வினோதமாகிய காரியாதிசெய் தேயுன்னுடலைக்
குமரச்செய்குவனின்று பாரென்றாள் இவை
யமருக்குமுறையன்று தேரென்றாள் (6)

வள்ளி சொல்லல்.

மதுரத்தை வடிகொண்டு வசனித்துலவுபெண்கண்
மனனைத் தனிகலந்து நேரவே யானு
மனதிற்றுடையுடைந்து சாரவே மணி
வாரைமீறிய தேபயோதர முறுதேயிதழ் சிறுதேயரி
வளையைக்கைவிடுதிந்தக் காலமே யிந்தக்
களையைத்தருதல் கொண்ட கோலமே (7)

கதிபெற்றசுரறங்கள் கையிலுட்கியுடல் பொன்றக்
கடைபட்ட சசிவந்து காயுதே கழத்
திடுமுத்த மொளிமங்கித் தீயுதே யடி
காதலாகிய தாதியே வடிவேலனோடிதை யோதுவாயிரு
கழலைப்பொன்முடியண்ட மேவியே யென்ற
தழலுற்றன வுகந்து தாவியே (4)

கனிகைக்கி நகைமிஞ்சி யுணவற்று மொழிகுன்றிக்
கலனைக்கொள் செயனந்தத் தாதியே கண்டு
மேவிவுற்று விளைகின்ற சேதியே குகன்
காதலாலென வேகிரா தனை மேவிமாறுத லாகவேசொலக்
கமலத்தன் செயலென்று கூறியே இறை
தமருக்குளிதை விண்டு தேறியே (9)

மனதொப்ப மருள்வந்து வரையிட்டுமென வந்து
வருவித்தகுற நண்பன் மீதிலே யறு
சிரனுற்ற வருள்கொண்ட போதிலே மட

மானையெனவிலாசையொடு தொடேனதாலிது வானதாமினி
மனவெட்கலறுமென மன்னுமே முரு
கனையிச்சையொடு முன்னப் பின்னுமே (10)

## 21-வது வேறு சந்தம்.

இனித்த செஞ்சொற் குறமானினன்பு தேட த்தினைப்
புனத்தையண்டிக்குகவேளும் வந்து நாட க்கரி
யிருளைச்சார்குழல் வளியைத்தாவள
மதனிற்றேடிய பொழுதிற்காவினி
லிசைப்பதொன்றுங் கிடையாமன்வந்த மீதும் பல
திசைக்குறைந்துங்கதி சோரவிண்டி தோதும் (1)

### முருகர் வள்ளியைத்தேடிவினவல்.

கனிக்குமுன்னங் தருவார வந்தபூவே விழும்
பனிக்கிரங்குஞ் செயலேநி றைந்தகாவே யடர்
கருவிக்கேமகின் மயிலைப்போன்மதி
வதனத்தேசசு பெருகத்தாரணி
கதித்தவள்ளிக் கொடியாளைக் கண்டிலீரோ வெனக்
குதித்தசங்கை க்ககமார விண்டிலீரோ (2)

கடற்கிரங்குங் கரியாக மஞ்சு மாரே தருத்
திடற்குறைந்தந் தழைமீது துஞ்சு வீரே கனி
கனியைக்கோறியிவ் வரையிற்கோபுர
முருவத்தாவியபலவிற் பாய் கிற
கவிக்குலங்கள் வழியாகவந்த நீரே யொளி
நிவர்த்திலங்குங் குறமானைக்கண்டி லீரோ (3)

வெடித்தரும்புந்துணர் சேருமுல்லை யாரே சிறந்
தடிக்கிளம்புங்கருவாழைவிண்ட தாரே கதிர்

கருவி-முகில்

மிளிரப்பார்மிசை மலர்மோக்கேகரி
வெகுளிப்போர் சேயவிழுமுத்தேகவை
விரிததெழுந்திங்குறலான சந்துத்    தூரே    பணி
தரித்தலம்புர் தொடியாளைக்கண்டி    லீரோ    (4)

யிரைக்கெழுந்திங் கொயிலாய்வரும்பு    றாவே    மலி
மரைக்குழுந்துங்கதி கூடும்பந்தி    யாவே    நதி
யிடையிற்போய்வரு நரை கொக்கேயுல
கினிலுற்றார்புக ழெலுமிச்சேதரு
விருக்குமன்றிற் குயிலேசிறந்த    மானே    யொளி
பெருத்ததங்கச் சிலையாளைக்கண்டி    லீரோ    (5)

தரைப்பொறுப்பினடவா வெழில்வவ்    வாலே    விரை
விரைக்கிலொத்து முளையாதுயர்செவ்    வாலே    கடு
தமரத்தே வரி யுளநத்தேயிரு
கழலொத்தேயுல விய சிட்டேநிறை
தடத்தின்முட்டச் சலியாச்சினைவ    ராலே    கொடு
விடத்தையொத்த விழியாளைக்கண்டி    லீரோ    (6)

கஜத்தைமுட்டிப் பசியாருகின்ற    வேறே    வெள்ளைக்
குசைப்பரப்பி லொழியாதுவந்த    பாறே    யொலி
கடலைத்தாவிய நதியிறப்பாய்கிற
வருவிச்சேலொடு குதியிட்டேவரு
கருத்தசெங்கட் சினைவாளைக்கும்ப    லாரே    மன
விருப்புறஞ்செவ்வித ழாளைக்கண்டி    லீரோ    (8)

பசத்தடர்ந்துமதி சூடிநின்ற    தேங்கேயுடு
வசித்தகொண்டைபணிவாய் வளைந்த    கோங்கே    யொரு
பதாற்றெவிளை தினையிற் கூடிய
கிளையைக்கோதறு மணிவிட்டேவிய
பனிக்கருப்பு மொழியாளைக்கண்டி    லீரோ    வளர்
புனத்தைவிட்டுப்பதிசாரக் கொண்ட    தாரோ    (7)

பாறு-பருந்து

எனப்புலம்பி வனமூடுசென்று வேர்த்தும் தினைப்
புனத்துரைந்து பலவாறுவிண்டு பார்த்தும் மன
திசையக்கூறுவ தொழியத்தேசுயர்
குறவச்சேரியிலிர விற்குதியை
யெழுப்பியந்தம் பெருமானைக்கண்டு கூவி வெளிக்
கிழப்பியின்று வரவேணுமென்ற தாவி (9)

தனித்துரைக்கப் பணிமாதுசந்து கோலிச்சென்று
கனிக்கடுத்துத்திடனாக நின்று மோலி மிகு
தையலைப்பாவனை யொடுதொட்டேகுரு
பரனுற்றுரென மகிழ்பெற்றேபதி
தனைச்சடக்க மெதுவாகமுன்க பாடம் திறந்
தனைக்குமுற்றதுரை யாதுவந்து கூடம் (10)

களைக்கடத்தியிரு மாதுங்கந்த வேளைக் கண்டு
களிப்படுக்க வரலாறுசிந்து வேளை வயிற்
கானத்தாதியை விறைவிற்போயொளிர்
பதியிற்சேரெனவதுவிட்டேகிய
கணத்தினிற் பைந்தொடியாளைக்கொண்டு சோலைக்கிடை
வணத்திருக்க வெயிலோனும்வந்த காலை (11)

வளைக்கலுற்றசிலை வேடர்சந்திப் போதே மணி
விளக்கையொத்த வடிவாளைக்கண் டிடாதே மதி
வதனத்தாதியை யிறையிட்டேவின
வியவக்காலவ டெறிவற்றேனென
மனக்கலக்கமுடனுடிப்பம்ப லோடே மிகச்
சினத்துரத்தபடையோடு சென்றக் காடே (12)

மலைக்கடுத்துவழிகூடிவந்த காலம் குகை
நிலைத்திருக்கவளியோடுகண்டிஞ் ஞாலம் யெங்கு

மோலி=மௌலி-மயிர்முடி பம்பல்=ஆரவாரம்

மடரிக்கானவர் வலிசற்றுகினு
மதிபற்றுவகை திருடிப்பூவையை
மயக்குவித்திங்கடமாயிருந்த வேடா வரைப்
புயச்செருக்கின் செயலால்விளைந்த கேடா (13)

தலைக்குலுக்கை யினிப்பாரு மென்று கூவி வரிச்
சிலைத்தடத்திலதி கூர்மையம்பை யேவி யுட
றளரத்தூரிய வரையிற்சேவக
னுடனுற்றேவரு குருதிச்சேறிணைச்
சரக்கழப் பெண்விழியாரக் கண்டு தாரை யுதிர்த்
திரக்கமுற்றிச் சதிகாரக் கும்ப லாரை (14)

விடுத்திருக்கில்வெகு வாய்ச்செயுங்கு டோரம் மென
வடித்துணைக் கின்பொடு சேவிக்கின்ற நேரம் குகன்
விரைவிற்றேசுயர் கொடியைக்கோறிய
பொழுதச் சேவனு மணுகிக்கூகுகு
வெனத்தலங்கள் கெடிசேரநின்று கூவ வேட
ரனைத்துமங்கங் குலைவாய்விழுந்து தாவ (15)

படைக்கெடுக்கும்வடி வேலன்றஞ்ச மாக வரு
மடக்கொடிக்கு மொருபாலிற் சிந்தை நோக ரவி
பதிதொட்டேகிய விடரிற்கோபதி
கலகக்காரண முனியுற்றேதனிப்
பரத்தினுக்கருட்சேயன் றன்னைப் போற்றும் திரு
மரைக்கரத்தமைத்தானந்தித்துச் சாற்றும் (16)

## 22-வது வேறு சந்தம்.

### நாரதர் சொல்லல்.

திந்தமாதனச்சந்திடையே சுராத்
தாதுலாவுதெய்வானைமனே கரா குன்ழக்
காதிராறுடையாய் நற்குண கரா வுனைத்

விடர் வனம்-சுரா-கள்

தஞ்சமென்றடையுங்கிராதர்க
டுஞ்சவிங்கவர் மங்கையாருயிர்
தங்குமா வுமக்குந்தரமா பர்ர்
சங்கமா தரிக்கின்றதயா கரா (1)

கந்தவார்குழற் சுந்தரி பாலனே
கானிலேயுரைதானவர் காலனே குழ
காசதாப்புலவோர்க்கனு கூலனே யுனைக்
கண்டகுன்றவர் பங்கமாறிட
விண்டொழுங் கொடு மன்றல்கோறியிக்
கன்னிமானை மணந்திடுஞ் சீலனே
யென்னநாத னுஞ்சொல வேலனே (2)

சந்திரோதயக் கன்னியென் ஞவியே
தாருவேயுயிராகிய தேவியே வந்து
மோதியேவலியார்கணை யேவியே களை
தந்திடைந்து விழுங்கிராதர்க
ணந்துமென்றுளம் நொந்திடாதினித்
தங்கிடாதவரைச் சென்று கூவியே
பொங்கமாயெழுப் பென்றெனை தாவியே (3)

அந்தவேளைவிற்பன்னி கொண் டார்டியே
யாவலாய்த்தமர் சேரிட மோர்டியே குகி
னேவலாகிய மேனுரை கூடியே மண
தன்புபொங்கியிலங்கு தேவனை
நன்குணர்ந்து தவஞ்செய்தேபெறு
மப்பனேயெனப்பன்முறை பாடியே
செப்பமாசற் றெழுந்தவர் கூடியே (4)

வஞ்சமேவிளைக்குஞ்சின மீறவே
மாசிலாவடிவேலனு மாறவே சயத்
தேசுமேவிமயிலினி லேறவே மண

வம்படங்கிய வெங்கிராதர்க
ளன்புகொண்டு சிறந்ததாழினே
மன்னியாதிமலர்க்கரஞ் சேறவே
சென்னமீ தெடுத்தின்னவை கூறவே (5)

தஞ்சமான குறக்குல தோரிலே
தாவலாவதெனேயகச் சீரிலே யுயர்
பூவைதேவையென்றுனுத னேரிலே பெண்ணைத்
தந்திடென்றுபுகன்ற போதகம்
நொந்திடைந்திலை யென்றமோவடுத்
தங்குமாறுவிடுத்தனே பாரிலே
பொங்கமாகநகைக்குமிவ் வூரிலே (6)

முன்னமே நடக்கைப்புத்தி வல்லையே
மோடிபோடுவ தாற்பய னில்லையே யினி
தோடுவேடு வச்சேரியி னெல்லையே. தங்கி
முண்டகங்களைவென்ற மாதினை
யண்டருங்கடிகண்டு சீதன
மொய்யெல்லாம் வஹித்தப்புரங் கல்லையே
யுய்தலேசுப மெத்தவும் நல்லையே (7)

யென்ன வேலனுக்கிங்கிதச் சேதியே
யெனலாரிரு தாடொழு தோதியே பமை
வரனமீதடியார்க்கனு பூதியே செய
வின்புறுங்குக னன்புமேலிட
நன்குணர்ந்தவர் தங்கிலேசெல
யிச்சையாய்க் கனிக்கும் பல நீதியே
மெச்சவேயுரைக்குஞ் செனும் வீதியே (8)

கங்கிலேகுற்றக்கும்பலுஞ் தேறவே
கானும்வேடமின்னர் மலர் தூறவே யருஞ்

தேறல்-அதிகப்படல்

சேனைமுடுவதாய்த்துகள் மீறவே திருக்
கங்கைதங்கிய செஞ்சடாடவிச்
சங்கரன் செய றங்கு நாரதன்
கந்தவேளைத் துடர்ந்தரு காறவே
வந்தபேர் சிறக்குஞ்ஜெயங் கூறவே (9)

சங்கமாமணிச்சிற்றகம் பற்றவே
தாவிவேடுவ ரோதிய ரற்றவே குகன்
மேவியே யொளிர்மாளிகை யுற்றவே நறை
தங்கிளந்தனநங்கைசோபன
மெங்கினும்புக டங்கவேசொலித்
தையலார் மணக்கம்பமும் நிற்றவே
செய்யும்வேலை விசித்திரம் பெற்றவே (10)

23-வது வேறு சந்தம்.

அந்தவேடர் மதத்தந்தி யாலே தரு
மடர்த்த மருப்பிலகுபந்தர் மேலே மணி
யழுத்திவெங்கதிர் பரவிய பிரபையை
வெறுத்திலங்கிய விகசிதமணவரை
யண்டமேவச் சமைத்தெங்கு மோலை விடுத்
தழைக்க வகுப்பினர்கள்வந்த காலை (1)

சொந்தமாக வரும்பந்து வாரே யுறத்
தொகுத்தலத் தொருங்கு குந்தி னாரே பினந்
துதிக்கைதங்கிய கணபதியரிவிதி
மதிச்சிரன்கம ழுமைதிரு சரஸ்வதி
தொண்டாரும்பதி கண்டப் போதே வளை
தொனிக்க நிலைத்தனர்க ளண்ட மீதே (2)

சிந்துபோலப் பறைதந்த வோசை யெங்குஞ்
சிறக்கவுடுத் தலைவனென்று மாசை கொளத்

திமித்தி திந்திமி தகதிக தரிகிட
வெனச்சிலம்புற நடமிடுமரிவையர்
சிந்துபாட விசைத்தந்தி கூட மிகச்
செறித்தகுழற் கணிகைப்பங்தி நாட (3)

கந்தவேளைக் குறவஞ்சி யாளைப் ப்பணி
கதிக்கவழைத்து வருகின்ற வேளை மலர்
கரத்தினங்கர மருவியவொலியோடு
தலத்துறைந்தவர் ஜெய ஜெய ஜெயவெனக்
கன்னல்சேரு மணத்திண்ணை மேலே குகன்
கனிப்பெண்ணிடத் தமரு மன்பி னாலே (4)

துய்யநாரதனுஞ் செய்ய வேதம் சொலத்
துவக்கிமுடித்தபின்ன ரெங்கு நாதம் கீதம்
தொனிக்க மங்கிலிய மதனைவனவளி
திருக்கழுந்தனி லதிசுபகரமோடு
துன்னுநாணிதோடு மன்னினானே ஜெகந்
துதிக்கமதிக்குமயில் கொண்ட கோனே (5)

தையல்பாகனோடு மெய்யர் யாவும் தருந்
தவத்தில் மிகுந்த புகழ்தங்கு கோவும் அதி
சயித்திடக்கடி மலர் மழைபொழிகிற
மகத்துவத்தினை வனமுறைகிற குறச்
சங்கமாகஞ் சிலிர்த்தங்கு காணும் செய்த
தவத்தின் முளைத்தபயனென்று பேணும் (6)

அண்டமாதி பகிரண்ட மேவ அற
மமைத்ததவத்தை யடைகின்ற தேவ கண
மனைத்துமின்பரு மணமியை முருகனு
மிளிர்த்தவம் பணிமலிவ்ளிவனிதையு
மண்டிவாழ்க வெனவிண்டு போற்றி த்தம
தகத்தையடுத்துறைவர் சிந்தை யாற்றி (7)

கொண்டகோலஞ்ஜெயங் கண்ட வேலா யுதன்
குவித்ததிருத்தணிகைக் குன்றின் மாலாய் க்குறக்
குலத்துறும்பதி யிடமுரைபுகலனு
மகட்கருந்துயி லணி மணிவரிசையுங்
கும்பலாகப்பல தின்ப மாக விறை
கொடுத்துவிடுத்தனன் சிறப்பொ டேக (8)

## 24வது வேறு சந்தம்.

சென்னிமிசை மின்னுபிறைமன்னு போதனே பணி
துன்னு நாதனே தருந்
தேசுகொண்ட வேலனென்றசெய்ய பாதனே மிகச்
செழித்தமரைமல ரகத்தினளையுட
னழைத்துவழிபுக வனத்துமகிபனுஞ்
செங்கமல நங்கையுமலங்கி மாற்றியே கழி
பொங்கி யேற்றியே யுடன்
சேறுகின்ற போதிலன்பு செப்பி யாற்றியே (1)

வின்னமற வென்னவரந்தன்னை யீயவே குற
மன்ன னுயவே யடி
மேவிமங்கை யோடுதங்கலங்கு போயவே பினர்
விருப்பமோடுவழி கடத்தியெழிலுறு
திருத்தணிகைவரை யிடத்திலனைவரு
மெச்சு தெய்வதச்சனதி பட்சம் நாடியே செய்த
வுச்ச மாடியே குக
வேளுமுந்த மானடைந்த மின்னுங் கூடியே (2)

யின்பமுடனங்குறைய மங்கை தாவியே யுடல்
பொங்கு மாவியே நறை
யேய்சிலம்பி னுதியந்தமின்று மேவியே சொலு
மெனக்குமரனடி துதிக்கவிகசித
முகத்துவரதனு முரைக்குமிடர்கொடுத்

தெத்தலமும் பெற்ற சுரனுற்ற வாதிலே ஜெயம்
பெற்ற போதிலே களை
யேகவந்தமாக விங்கியைந்த மீதிலே (3)

துன்பமுழுதுஞ் சிதைந்தடைந்த மேலுமே குறக்
கும்பி ஞாலுமே மிகத்
தூறுமம்பென்மே லடைந்துதும்பி போலுமே வந்து
துளைத்த சிறுமையும் மகத்தினமிகவு
மகத்துவமிதென மதித்த குலிசனுந்
தொண்டுமுத லண்டிமலர் சிந்தி வேதமே திக
ழெஞ்செம் பாதமே யதி
சோபனங்களோடு பணிந்தொன்றும் போதமே (4)

அன்றியுமுழங்கு சிந்தகன்ற காவிலே மலி
கின்ற கோவிலே யுற
வாவிநின்று தேசுகொண்டமைந்த பூவிலே கொடி
யறுத்திமலையடி யிடத்தினிறைசர
வணப்பொய்கையிவிட மிகுத்த தினலரு
மந்திபகல் சந்தியுந் துலங்குமா றேயும் அதை
நந்தலே யோயும் படி
யாவருந்தினே சொறியுமம்பிலே தோயும் (5)

மன்றன்மிகு குன்றனந்த முண்டென் றாலுமே யிதிற்
சிந்தை சாலுமே புவி
மானிடங்கள் கோதுபொன்றமண்டி யேலுமே ஜெக
மனைத்துமழிகிற தினத்தினிலுமிடர்
விடுத்து நிலைபெறு மிதிற்றகைமையுடன்
வந்துதிரியிந்து தரிகொண்டி டாமலே யுறை
ஜெந்து கூவிலே மட
மாகுழின்ப வீடுசொந்தமன்று லேசிலே (6)

அந்தியில் வதிந்தவரி நந்தி மாஞ்சியே நிறை
நந்தி காஞ்சியே யெல்லை
யாகவிந்த மேருநின்ற தன்பொ டாஞ்சியே செய
வமைத்தல மிதினமைத்தொழுபவர்கள்
பெருத்தபொருள்களை வாஹிப்பதொடுவரு
மல்லல்களை வெல்லவிது நல்ல தாகுமே பழந்
தொல்லை யேகுமே யித
ஞதிசொல்லவே யனந்தனஞ்சிப் போகுமே (7)

கந்தகளபம் புனுகுறைந்த பாவையே யிடை
நைந்த பூவையே முழுக்
காரணங்களோத வெல்லையன்று தேவியே யெனக்
கருத்தமிடறனை முறைப்படி தொழுதி
ரதத்தில்வழியொடு திருக்கைலைமலைக்
கங்கின்மதியண்டி வளர்கந்த மாதனம் யிசை
பொங்கு சாதனம் தனிற்
காளிமந்தனே செறிந்த கந்த வாதனம் (8)

25-வது வேறு சந்தம்.

பொன்மாதை யன்னதெய்வ யானையுமே
குற மானையுமே விய
பூமானையே தொழுது தானையுமே தகு
புஜபெலமேவிய வசுரரைவேரொடு
முடிகெடவேல்விடு மறுமுகனேகதிர்ப்
பொன்னாரமின்னுகன்னித் தாதியையே
தந்த சோதியையே கொண்டீர்
பூமீதிலேகப்பிரைக் யாதியையே (1)

யென்னுசைமன்னவென்ன மாவள்ளியே
தொழ மாவள்ளியே குழ
லேய்மர்து பேண்மூன மர்வளியே புண

நந்தி-அரவம் மாஞ்சி-வாசனைப்பண்டம் ஆஞ்சி-விளையாடல்.

விசைவடிவேலனு முரைசெபுமாயிர
விழியவன்மாதிடமடியிருபேர்களு
மெல்லைலறுமண்ணைமன்னு மாபலியே
யற மாபலியே செய
விருகநாடுமகி மாபலியே (2)

கொண்டாடவந்துறைந்து சூதவமே
நிறை பாதவமே யண்டிக்
கோடானுகோடிதின மாதவமே செய்து
குமரகுகாவெமையடையுமெனுமொழி
புகலலுமேயெனதுரைவழியேதனிக்

கொம்பானைதந்ததுன்னைக் கோபதியே வளர்
தான் மதியே யவள்
கோமானிலாரிவர வேபதியே (3)

விண்டேகுகின்றமள்ளர் காணலுமே
யுடல் பேணலுமே மிக
மேலாகியேவளரு மாணலுமே கண்டு
விகசிதமாய்முறை நெறிவழியேயுமை
வதுவைசெய்தோ மெனமனமகிழ்வாயிரு

மெல்லோதியும் புகழ்ந்து சாற்றினரே
முறை யாற்றினரே வடி
வேன்மேவு சேவகனைப் போற்றினரே (4)

சிங்காசனம் பொருந்திப் பூரிகையும்
சங்கு பேரிகையும் அதி
சிரோடு சாரவிரு காரிகையும் புக
டிருநிகராயரு குறவெகுதேவர்கண்
மறைசொல மாசுணமணிமுடிவீசிய

செந்தே செங்குமிலங்க ஆழியதே
தொழக் கோழியதே கொண்ட
தேவேசனைபெருக வாழியதே (5)

---

மகி-பூமி மா-இலக்குமி பலி-இறை சூதவம்-வண்டு பாதவம்-மலை
மாணல்-பெருமை ஊழி-உலகம்

ம்ங்காதுறுங்கடம்பு வாழியவே
வள்ளி வாழியவே வன
மாணுள் தெய்வானைமயில் வாழியவே தினை
மலையிடமாய் வளிசரிதையைமானில
மிசைசிறிதோதிய கனகசபாபதி
வண்பாநிறைந்திலங்கி வாழியவே
யறம் வாழியவே தினம்
மாவேறுபூவுலகம் வாழியவே (6)

வாழி வெண்பா.

வாழிமலைவேடர் பெற்றவஞ்சியிடை வள்ளியுறை
வாழிதெய்வானை மயில்வாழி வாழியுமை
வாழிவாழி சோதிநாதன்வாழி வாழிமாமுராரி
வாழிவாழி பூமி வேலவன்.

வள்ளிச் சரித்திரச் சந்தச் சிந்து

முற்றுப்பெற்றன.

குமரகுருபர சகாயம்.

உ

சுப்பிரமண்யர் பேரிற்

# பக்திரசக்கீர்த்தனைகள்

இஃது
வள்ளிச்சரித்திரச் சந்தச்சிந்தியற்றிய
S. காரைக்குடி S. ஆறுமுகபிள்ளையவர்கள்
குமாரர்
மேற்கண்ட புலவனேந்தல்

சி. ஆ.
S. A.

## கனகசபாபதி பிள்ளையவர்களால்
இயற்றியது

### விநயகர் வணக்கம்.

அறுசீர்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

காரானை முகனையெனைக் காத்தானை மனக்கசடர்க்
கன்பா பென்றும்
வாரானை மறைமுதலில் வந்தானைப்பணியாத
மடையர் நோயைத்
தீரானைக் கவிஞர்கவி தீர்த்தானைப் புலவரைநிந்
திப்போர் தம்மைச்
சேரானை யன்பரகஞ் சேர்ந்தானை நினைக்குமென்றன்
சிந்தை தானே.

இராகம் - மோகனம் - சாப்பு - தாளம்

பல்லவி.

அருள்வாயைங் கரனே
அண்டர் தொழும் பரனே அருள்

அநுபல்லவி.

பெருவாரியிற்றுயின்ற பீதாம்பரன் மருகனே
தருவாயுரன்மகனே தனிமாதங்க முகனே அருள்

சரணங்கள்.

பத்தர்களைத்தினமும் பாதுகாத்திடுந் தேவனே
சுத்தச்சதுர் நாவனே தூமகானு பாவனே அருள்
அத்திபகைஞன் மீதா யாயிசுந்தரி பாலனே
முத்திதருஞ் சீலனே மோனவனு கூலனே அருள்
பாலன் கனகசபாபதி தமிட் கரு ணீதனே
ஞாலம்புகழ் போதனே நன்மைதரு நாதனே யருள்

இராகம் - தோடி - தாளம் - ஆதி.

பல்லவி.

கணநாதா மறைபுகழ் கணநாதா மதிதரு கணநாதா வருள்
காரை நேருமக மேருவினேறனைய (கண)

ஓரடிப்பதம்.

பணிதிகழரசுதனே வனிதையிடவைபாகா
வழுமிகுசகா திபணிசுமுகா
திருமருககா வெனையுமொருகா
பரிதி மதி பரவு திரிபுவியுலவிய
நிருதர்களகமற வயில்விடுசரவண
பவச கோதரா கனி
வலவை சேகரா தமிட்
பாடுவோருனைத் தேடவேமதி
கூடவேயுட னுவோய் மலர்
பாதா சகலகலைநீதா கருணைசெயும் நாதா முதிர்ந்தபிரைக்யாதா
[வெழில்பெருகு

பகவதிமணிமலி தனத்தடத்தினி லகமகிழ வமுதுகுடித்து முத்தமிழ்
பழகிய சுபகர விகடகரடவடர் மழைமத மொழுகிய கரிமுக சுகுணச
பாநாயக சுந்தர சந்தம்
ஞானோபவசிந்தனை சிந்ததி
பாமாதியொடுநித மேயுனதிருவடி யேதுதிகனகச பாபதி தமிழ்புனை
(கண)

## சுப்பிரமணியர் கீர்த்தனைகள்

இராகம் - கமாஸ் - தாளம் - சாப்பு

பல்லவி.

ஆதி தந்தபாரா தாரனே
யருள் வீரனே (ஆதிதந்த)

அனுபல்லவி.

சோதிமிகுவடி வேலா
சுந்தரியாளீன்ற பாலா
மாதவர் கொண்டாடிய சீலா
வள்ளிதன் லோலா (ஆதி)

சரணங்கள்.

கந்தமலரணி காதா
கருணைக்கண் பார்க்கொண் ணுதா
செந்தாமரைப் பூநிகர் பாதா
திகழ் பிரைக் யாதா (ஆதி)

நந்தலர் செந்தூரொய் யாரா
நறுங்கடப்பம்பூத் தாரா
விந்தைபெறவே ரெடுந் தீரா
மிளிர்ம யூரா (ஆதி)

கலையுணர் பாரதியே
கனகச பாபதியே

சொலுந்தமிழ்க்கருடரும் பதியே
துய்ய நிதியே (ஆதி)

இராகம் - முகாரி - தாளம் - ஆதி

பல்லவி.

கா வா கா நாதனே மயிலார் சேவ
கா வா கா நாதனே
காவா குமரதேவா பூவார்மஹானுபவா
கந்தமிகுந்தில கந்தரிமைந்தக னிந்துவிரைந்தடி தந்து பொருந்துகு(கா)

சரணங்கள்.

குஞ்சரியணை லோலா நஞ்சணியரன்பாலா
குங்குமமுங்கம டங்கலருங் கொளு மங்கை மருங்கிலி ணங்குகாமுரு
[கா வா கா

தஞ்சம வேறுண்டோவேலா வஞ்சசுர்குல காலா
தந்தைமுன்வந்த சுகந்தநிரந்தர மைந்தனிடைந்து வருந்துகிறேன்
[முரு (கா)

அலைகடற்புவிக்காறு தலையாய்வந்திடு மேறு
அரசிவகுருபர பகவதியுதவிய சரவணபவமதிதருகுவை திருமுரு (கா)

கலையுணர் கவிராஜன் மலைமகன்மேல் விஸ்வாசன்
கனகசபாபதி தினமுறையே சொலுபனிதமிழே புனையதிபதியேமுரு
(கா)

பல்லவி.

கந்தனேயருடந்து கந்தாண் முருகா செழுங்
கனியே நவமணியே யிருகழலிணைதொழ வினையிடர் சிவ (கந்தனே)

அநுபல்லவி.

சந்த்ரச்டாதரன் மைந்தனேயிது
தருயே பெருநிதியேகுக சரவணபவகுருபரசிவ (கந்தனே)

சரணங்கள்.

சிந்தைதனைந்திடா தெந்தனையாளுஞ்
சீலாவடிவேலா வெரிதிரிபுர மெழநகைபுரிசிவ (கந்தனே)

கந்தரமுகன் றன்சகோதரா
கலைமகள்சீரடியிணைபணி கனகசபாபதி தமிழணி (கந்)

பல்லவி.

வீரனேசரணம் அசுரசம்
மாரனேசரணம்

அநுபல்லவி.

பாருளோர்பணி பதவடிவேலணி
தீரனுகியஜெக தேவசிங்கார மயில் (வீரனே)

சரணங்கள்.

சூரர் குலகாலா வடிவுறு நாரிதருபாலா
ஆரணுபரா அகிலத்தி யாகரா
தாருவிலுறைகுலி சனுக்கரசிய்ந்தமயில் (வீரனே)

(2)

ஆறுமாமுகனே திருமொழி கூறுவாய்குகனே
ஏறுமேவிய வேந்தலில் வாவிய
மாறுபடாதகுற வளியைமணாந்தமயில் (வீரனே)

(3)

கந்தனேமுருகா கரிதொழு வந்தமான்மருகா
வந்தசர்போற்றிய வடிபணிந்தேற்றிய
மைந்தனிடரிடற வருவாய்விரைந்துமயில் (வீரனே)

(4)

மாபதியுய வழுகா கனகச் பாபதிபணிகுழகா
கோபதிமகவின்யக் கூடி மருங்கிலியை
தீபமணிகுமரனே கா நடனமயில் (வீரனே)

எப்போ வருவானோமுருகேசன் என்ற மெட்டு.

பல்லவி.

(எப்போ) தருள்வானோ குமரேசன் அதி
தீர்க்கமதிசேர வெப்போ (தருள் வானோ)

அநுபல்லவி.

குருபர சரவணநதியுறை
மருமலிதிருமுருக ணெப்போ (தருள்)

சரணங்கள்.

அரஹரனுமை பாலன் படைவீட்டிலமர் மாகனத்தான்
அரஹரனுமை பாலன்
சரமனவிழி வளிவனிதையை
மருவியபுயமுருக னெனப்போ (தருள் வானோ)

கெஜமுகவனுக்கிளையோன் கலிதீர்க்கவிடையாமணித்தான்
கெஜமுகவனுக்கிளையோன்
வசுமதிரவி ரிசிநிசிசரர்
தொழுமிருபத முருகனெப்போ (தருள் வானோ)

பதுமினிக்குறமாது வளை பார்க்கவிலைகூறிவிற்றோன்
[பதுமினிக்குறமாது
துதிக்கனகசபாபதிசொல மதியருடிருமுருகனெப்போ
(தருள் வானோ)

பட்டாபிஷேகம் படைத்திந்தப் பூலோகம் என்ற மெட்டு.

கண்ணிகள்.

கன்னன்மணிமுடி துன்னமர்கத வன்னமயின்மிசை
மன்னியதேசுகொள் பன்னிருகைவேலா—வுமையவ
டன்னருமைப்பாலா திரு
பூரகருத்தர் தேதுசதர் நீயருள்தர்
பண்ணவர்சேவகனே (கன்னன்)

உன்னதமாகிய சென்னியுறுவரை தன்னிலிலகிய
தன்னியனே குறக்
கன்னிமண வாளா மணியணி
மின்னுதடந் தோளா நிரு
பாகருதா தேதுசதா நீயருள்தா
